Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 16 புதன்கிழமை (01.07.2015) பக்கங்கள் 20 ஓசை – 274

## அதிகரித்தது புவிஈர்ப்பு விசை நேற்று லீப் வினாடி


புவியின் ஈர்ப்பு விசை காரணமாக பூமியில் நேற்று ஒரு வினாடி அதிகமாக இருந்தது என்று நாசா விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,

பூமி, சந்திரன், சூரியன் இடையே புவி ஈர்ப்பு விசை அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக பூமியின் சுழற்சி வேகம் குறைகிறது. இதனால் பூமி தன்னைத் தானே சுற்றிவர 86,400.002 வினாடிகள் எடுத்துக்கொள்கிறது.

ஒவ்வொரு நாளும் இவ்வாறு உள்ள கூடுதலான நேரம் பல ஆண்டுகளாக சேர்த்து கணக்கிடும்

19 ஆம் பக்கம் பார்க்க



நயினை நாகபூஷணி அம்பாளின் நேற்றைய ரதோற்சவத்தின் போது பக்தர்கள் வெள்ளத்தில் ரத பவனி வரும்போது.... (05,175)

## மனிதாபிமான பணியகம் மூடப்படுகிறது

கொழும்பில் உள்ள ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்புப் பணியகம், இந்த ஆண்டு இறுதியில் மூடப்படவுள்ளது.

பாங்கொக்கில் உள்ள ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்புப் பணியகத்தின் ஆசிய – பசுபிக் பிராந்திய தலைவர் ஒலிவர் லாசி- ஹோல் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

சில ஆசிய நாடுகளில் மனிதாபிமானப் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு ஐ.நா. முடிவெடுத்துள்ளதாகவும் இதன்படி, பபுவா

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் கால பாதுகாப்பு விசேட பொலிஸ் செயலணி

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதை அடுத்து தேர்தல் செயற்பாட்டுக்கட்டமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பான முறைப்பாடு ஏற்றுக் கொள்ளல் மற்றும் அது தொடர்பான விசாரணை குறித்த பொலிஸ் செயற்பாட்டுக்

19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னிலை சோசலிசக்கட்சி கிளை திறந்தது யாழ்ப்பாணத்தில்

(கொழும்பு)

முன்னிலை சோசலிசக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

ஆரியகுளம் பகுதியில் அமைந்துள்ள இந்த அலுவலகத்தை காணமற்போன குகன் முருகானந்தத்தின் மகள் சாரங்கா திறந்துவைத்தார்.

இந்த சூழலில் கடத்தப்பட்டு காணமற்போனவர்கள் பலர் அவர்களை தேடிச்சென்றோரும் காணாமற் போயுள்ளனர்.

இந்த நிலையை முற்றாக ஒழிக்க வேண்டும். அந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக இந்த அலுவலகம் திறக்கப்படுகின்றது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் சேனாதீர, பிரசாரச் செயலாளர் புபுது யாகொட, வடபிராந்திய அமைப்பாளர் யூட்சில்வா புள்ள, மக்கள் போராட்ட இயக்கத்திலிருந்து கிருபாகரன் ஆகியோருடன் காணாமற் போனோரின் உறவுகள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வேட்பாளர் பட்டியலில் இடம் இல்லை





(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலோ எவரையும் பிரதமர் வேட்பாளர் என்ற தோரணையில் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக்கொள்ளப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் பட்டியலிலோ தேசியப்பட்டியலிலோ இடம் கிடையாது என்றும் அவர் ஆணித்தனமாக அறிவித்துவிட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் புலிகள் அறுவர் விடுதலை

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் ஆறு பேர் நேற்று புனர்வாழ்வு பயிற்சி முடிவடைந்த நிலையில் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. யுத்த காலத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவினார்கள் மற்றும் அந்த அமைப்பில் அங்கத்துவம் வகித்தார்கள் என கைது செய்யப்பட்டு பூசா உள்ளிட்ட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் ஆறு பேர் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வு ஆணையாளர் கேணல் எம்.எச்.ஆர்.கமின்

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் முடிவு இன்று



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பான மகிந்த ராஜபக்ஷவின் முடிவு இன்று அறிவிக்கப்பட்டலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கட்டுப்பணம் ஏற்கப்படுகிறது

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதி நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிடம் இருந்து கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிட விரும்பும் அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களிடம் இருந்து, வார நாட்களில் மட்டுமே கட்டுப் பணம் ஏற்றுக் கொள் ளப்படும் என்றும், எதிர்வரும் 13ஆம் நாள்

19 ஆம் பக்கம் பார்க்க

## தளபதி ஓய்வு

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேராவின் சேவைக்காலம் நேற்றுடன் நிறைவு பெறுகிறது.

இதுவரையில் அவரது சேவைக்காலம் நீடிக்கப்பட

19 ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு படைகளை அகற்றுங்கள்



பக்கம்-07



இலட்சோப இலட்சம் மக்களின் அரோகரா கோஷம் விண்ணதிர நயினை நாகபூஷணி அம்பாள் நேற்றுக் காலை 8.30 மணிக்கு தேரில் ஆரோகணித்து அருள் பாலித்தார். நேற்று இடம்பெற்ற தேர்த்திருவிழாவிற்கான போக்குவரத்து, குடிநீர் வசதிகள் என்பன சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. அமுதசுரபி அன்னதான மடத்தில் பக்தர்களுக்கு சிறப்பான முறையில் அன்னதானமும் வழங்கப்பட்டது. (05,175)

# குடிபோதையில் குடும்பஸ்தர் குடும்பத்தை எரிக்க முயற்சி

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையில் குடும்பஸ்தர் ஒருவர் தன்னையும் எரித்து, தனது பிள்ளைகளையும் மனைவியையும் எரிக்க முற்பட்ட சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை மாவடி சந்தியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு செய்ய முற்பட்டுள்ளார்.

குறித்த நபர் தினமும் வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போது குடித்து விட்டு வந்து, தனது மனைவியுடன் சண்டையிட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றைய தினம் இரவும் வழமை போல மனைவியுடன் சண்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து, சண்டை பிடித்த நபர் தன்மீது மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்ததுடன், எரிந்து கொண்டிருந்த அடுப்பை தூக்கி தனது மனைவி மற்றும் பிள்ளைகள் மீதும் எறிந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் பிள்ளைகள் மற்றும் மனைவி ஆகியோர் தீப்பிடிக்காமல் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாக தெரிவிக்கப் படுகிறது.

எனினும், குறித்த நபரின் கை, கால் மற்றும் முதுகு பகுதிகள் தீயில் எரிந்த நிலையில் அயலவர்களால் காப்பாற்றப் பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 15 பேருக்குத் தண்டம்

(கரணவாய்)

மது போதையில் வாகனம் செலுத்திய 15 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தினால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தியபோது மேற்படி 15 பேருக்கும் ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (18)

## வாகனங்கள் நிறுத்துவதால் அசௌகரியம்

(குருநகர்)

பிரதான வீதிகளிலிருந்து பிரிந்து செல்லும் சந்திகளில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்துகளில் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பாதசாரிகள் வாகன சாரதிகள் போன்ற அனைத்து மக்களும் விசனம் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக, யாழ். பிரதான வீதியில் ஆறாம் குறுக்கு வீதிச் சந்தி (பிலிப்ஸ் நோர்சிங்ஹோம்) இல் இடது மற்றும் வலது பக்கங்கள் இரண்லும் முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்பட்டு வருகின்றன. இதனால் பிரதான வீதிக்கு செல்வதற்கும் அங்கிருந்து ஆறாம் குறுக்கு வீதியுள் வருவதற்கு முயற்சிக்கையில் வாகனங்கள் மோதுகின்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதே நிலைமை 1ஆம்,2ஆம் 3ஆம்,4ஆம்,5ஆம் சந்திகளிலும் நிகழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (68)

## வீதியை திருத்தக் கோரிக்கை

(வண்ணை)

வண். வடமேற்கு கேசாவில் பிள்ளையார் ஆலய வீதி பல வருடங்களாக செப்பனிடப்படாமையால் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனூடாக கொக்குவில் மேற்கு, கேணியடி ஆனைக்கோட்டை அப்பாலும் பயணிக்கும் மக்கள் தினமும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் மழை காலங்களில் நீர் நிறைந்து வீதி குளமாகக் காட்சி தருகிறது. இதனூடாக பெரியபுலம் இளையதம்பி கொக்குவில் இந்து, யாழ். இந்து கல்லூரிகளுக்கு சீருடை, காலணிகள் அணிந்து போய்வரும் மாணவ, மாணவிகள், உத்தியோகத்தர்கள், பாதசாரிகள் எனப் பலரும் சொல்லொண்ணா துயரங்களை எதிர்கொள்வதாகவும் இதனை உரிய முறையில் செப்பனிட்டுத்தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (68)

# நல்லூர் உற்சவத்தினை முன்னிட்டு ஆக்கத் திறன் போட்டிகள்

(திருநெல்வேலி)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே அறநெறிப் பாடசாலை முக்கியத்துவத்தையும் அதனை மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு அவர்களின் ஆக்கத் திறனை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்கி அவர்களது ஆக்கத் திறன் வெளிப்பாடுகளை பாராட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சித்திரம், வில்லுப்பாட்டு, பேச்சாற்றல், பண்ணிசை, பஜனை, நாடகம், எழுத்தாற்றல், பரத நாட்டியம் ஆகிய ஆக்கத்திறன்களை வெளிக்கொணர்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி ஆக்கத் திறன்களை வெளிக்கொணர்வதற்கான விதிமுறைகள், விண்ணப்பப்படிவம் என்பவை தபால் மூலம் அனைத்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாக்கத் திறன் நிகழ்வின் விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து அறநெறிப் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றித் தமது ஆக்கத் திறனை வெளிப்படுத்தவும் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே ஒரு எழுச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தவும் அனைத்து ஆலய நிர்வாக சபையினரும் இந்து நிறுவனங்களும் தங்களின கீழ் பதிவின் உள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு விண்ணப்பப் படிவங்களையும் விதிமுறைகளையும் வழங்கிப் பங்குபற்ற ஒத்துழைப்பு வழங்குமாறு திணைக்களம் கோருவதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (137)

# தெல்லிப்பளை வாசிக்கு 1 இலட்சம் ரூபா பரிசு

(திருநெல்வேலி)

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் தெல்லிப்பளை வாசியொருவருக்கு ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த 24ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பெற்ற பவர் லொற்ரோ சீட்டிழுப்பில் 15 ஆறுதல் பரிசுகளில் ஒரு பரிசாக ஒரு இலட்சம் ரூபா பணம் இவ்வதிர்ஷ்டசாலிக்குக் கிடைத்துள்ளது.

இவ்வதிர்ஷ்டச் சீட்டை சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் சீட்டுக்கள் விற்பனை செய்யும் வைத்திலிங்கம் நடராசா என்பவரிடம் மேற்படி நபர் வாங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# புனரமைக்கப்படாத வீதியால் மாந்தை கிழக்கு மக்கள் அவலம்



முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 2,800 குடும்பங்கள் தினமும் பயன்படுத்தும் பிரதான வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதால் தாம் போக்குவரத்துச்செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மூன்று முறிப்பு, பாண்டியன்குளம், வீரப்பிராயர் குளம், பனங்காமம், கொம்பு வைத்த குளம், நட்டாங்கண்டல், சிறாட்டி குளம், விநாயகபுரம், கொல்லவிளாங்குளம், பாலிநகர், சிவபுரம், அம்பாள்புரம் உள்ளிட்ட மிகவும் பழமை வாய்ந்த விவசாயக் கிராமங்க ளையும் அதனை அண்டிய சிறிய கிராமங்களிலும் 2,800 குடும்பங்களைச் சேர்ந்த 9,975 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராம மக்கள் மருத்துவ வசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் போன்ற எந்த வசதிகளைப் பெற்றுக் கொள்வதாக இருந்தாலும் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது.

குறிப்பாக சிறாட்டிகுளம், மூன்றுமுறிப்பு, கொம்புவைத்தகுளம், பாலைப்பாணி உள்ளிட்ட கிராமங்களில் வாழும் மக்கள் சாதாரணமாக ஒரு தீப்பெட்டியை வாங்குவதாக இருந்தாலும் சுமார் 10 கிலோமீற்றர் தூரம் சேதமடைந்த வீதியூடாகச் சென்றே அவற்றை பெற்றுவர வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேற்படி கிராமங்களுக்கான பிரதான வீதிகள் எவையும் புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் எந்த வாகனத்திலும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

குறித்த கிராமங்களுக்கான பிரதான வீதிகள் நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேச சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சொந்தமான வீதிகளாக காணப்படுவதுடன், பிரதான வீதியை புனரமைக்க நிதி இன்மையால் புனரமைக்க முடியாதுள்ளதாக திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இப்பகுதி மக்கள் மீள்குடியேற்றப்பட்டு தற்போது ஆறு வருடங்களைக் கடக்கின்ற போதும், இன்று வரை தமது அன்றாடப் போக்குவரத்து தேவைகளுக்குப் பயன்படுத்தும் பிரதான வீதிகள் புனரமைக்கப்படவில்லையெனவும், மழை காலங்களில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை எற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது பனங்காமம் முதல் மல்லாவி வரைக்குமான போக்குவரத்துச் சேவைகள் கூட பாதிக்கும் நிலை காணப்படுவதாகவும் குறித்த வீதியினை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


# சங்கீத பாட செயலமர்வு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11 வரை யான வகுப்புகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான செயலமர்வு நடைபெறவுள்ள தாக வலயக்கல்விப் பணிப்பா ளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு நாளை மறுதினம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் காலை 8 மணிமுதல் பி.ப 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. இச் செயலமரவில் ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும், தவிர்க்க முடியாத காரணத்தால் செயலமர்வில் கலந்து கொள்ள முடியாமற் போனால் வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் அனுமதி பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் மாதிரி வகுப்பு எடுத்துக் காட்டுவதற்கு தயாராக வரவேண்டும் எனவும் பங்கு பற்றுநர்களுக்கு தேனீர சிற்றுண்டி, மதிய உணவு என்பன வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)



அளவெட்டி தவளக்கிரி அம்மன் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது அம்பாள் தேரேறி வருவதனைக் காணலாம்.

# முத்தமிழ் விழாவில் சாதித்த மாணவர்களுக்கு கௌரவம்



திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலய முத்தமிழ் விழா அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தவிழாவில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தம்பதியர் முதன்மை விருந்தினர்களாகவும், கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்.தமிழறிவு வினாவிடைப் போட்டியில் மாகாண மட்டத்தில் ஐந்தாம் பிரிவில் மூன்றாமிடத் தைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவிகள் பதக்கம் அணிவித்தும், சான்றிதழ் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் வடமொழிக் கூத்து நாடகப் போட்டியில் வலயமட்டத்தில் முதலாமிடம் பெற்ற மாணவ,மாணவிகள் விருந்தினர்களால் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலை மட்டத் தமிழ்த் தின நிகழ்வில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவ மாணவிகளும் கௌரவிக்கப்பட்டனர்.

விசேட நிகழ்வாக பிரதம விருந்தினரால் பாடசாலைக்கான உத்தியோகபூர்வ இணையத் தளமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

# உயிலங்குளத்தில் விபத்து; பாடசாலை அதிபர் படுகாயம்

மன்னாரர் - உயிலங்குளம் பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம் பெற்ற விபத்தில் பாடசாலை அதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் மன்னார் இலகடிப் பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபரான அலெக்ஸ் குயின்டஸ் ஜேரோம் பெர்னாண்டோ (வயது-47) எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த அதிபர் வங்காலையில் உள்ள தனது வீட்டில் இருந்து பாடசாலைக்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் உயிலங்குளம் பிரதான வீதியூடாகச் சென்று கொண்டிருந்த நிலையில் உயிலங்குளம் நானாட்டான் வீதியைக் கடக்க முற்பட்ட போது வேகமாக வந்த ஹயஸ் ரக வாகனம் மோதியுள்ளது.

இச்சம்பவம் காலை 7.16 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன் போது குறித்த அதிபர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் அப்பகுதியில் நின்றவர்களினால் மீட்கப்பட்டு உடனடியாக மன்னார் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் பயணித்த மோட்டார் சைக்கிள் கடும் சேதங்களுக்கு உள்ளாகியது. இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு குறித்த ஹயஸ் ரக வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளை மன்னார் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நடன பாடச் செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வு எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8 மணி முதல் பி.ப 4.30 மணிவரை சுனனாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இச் செயலமர்வில் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் நடனம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர் தவிர்க முடியாத காரணத்தினால் செயலமர்வில் பங்குபற்ற முடியாமல் போகும் பட்சத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முன் அனுமதி பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. செயலமர்வில் பங்கு பற்றும் ஆசிரியர்கள் மாதிரி வகுப்பு எடுத்துக் காட்டுவதற்கு முன் ஆயத்தத்துடன் வரும்படி கேட்கப்பட்டுள்ளனர். செயலமர்வில் கலந்த கொள்ளும் அசிரியர்களுக்கு தேனீர்,சிற்றுண்டி,மதிய உணவு என்பன வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)



தேசிய கலை இலக்கியப் பேரவையின் 42ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணம் கொக்குவிலில் கடந்த 27.ஆம் திகதி இடம்பெற்ற மாநாட்டின் முதல் நாள் மாலை புதுவசந்தம்-2015 ஆண்டுமலர் வெளியீட்டு வைபவத்தில் பேரவையின் மத்திய குழு உறுப்பினர் மு.மயுரன் வரவேற்புரை ஆற்றுவதையும், பேரவையின் புதிய பொதுச்செயலாளர் தெ.ஞ. மீனிலங்கோ உரையாற்றுவதையும், புதுவசந்தம் -2015 ஆண்டுமலரினை பேராசிரியர் சி. சிவசேகரத்திடமிருந்து திருமதி தவமணிதேவி முருகையன் பெற்றுக்கொள்வதையும் காணலாம்.

நீ இல்லாமல் எதுவும் நடக்காது என்று நினைப்பதை விட பெரும் முட்டாள்த்தனம் வேறில்லை

-அன்புவழியூர்க்கவிராயர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இதனை இவர் முடிப்பரா, ஆய்க!

அடுத்த ஐந்து வருடங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளையும் இந்த நாட்டை ஆளப் போகின்றவர்களையும் தீர்மானிக்கும் பொதுத் தேர்தலுக்கு இன்னும் முப்பத்தேழு நாட்களே இருக்கின்றன.

நாடு முழுவதிலும் கட்சிகளும் மக்கள் தலைவர்களாக வர விரும்புபவர்களும் தங்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்று கூறும் காரணங்களை மக்கள் முன்வைத்துப் பிரசாரங்களை ஆரம்பித்து விட்டார்கள்.

வடக்கைப் பொறுத்த வரையில், இதுவரை காலமும் அரசை எதிர்ப்பதற்காக தமிழ் மக்களினது ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என்ற ஆவேசக் கோரிக்கைக்குச் செவிசாய்த்தே பெரும்பான்மைத் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை அளித்து வந்திருக்கிறார்கள்.

இந்தப் பொதுத் தேர்தலில் நிலைமை மாறியிருக்கிறது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியைத் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்கள் அனைவருமே அரசுடனான இணக்க அரசியல் மூலம் தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக வாக்களிக்கக் கோரியே போட்டியிடுகின்றார்கள்.

தமிழ் மக்களது அரசியலைப் பொறுத்த வரையில் இது முக்கியமானதொரு மாற்றமாகும். குறிப்பாக, கடந்த தேர்தல்களில் தமிழ் மக்களினது பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றிருக்கும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசுடன் பேசித் தீர்வைப் பெறுவதற்காகத் தமக்கு வாக்களிக்க வேண்டும் என்றே கோரியிருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேசியிருக்கிறோம். தேர்தலின் பின்னரும் அவரே ஜனாதிபதியாக இருப்பார் என்பதால், தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான நல்ல சந்தர்ப்பம் இதுவே. தமிழ் மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிடக் கூடாது என்றே கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மக்களிடம் கேட்டிருக்கிறார்.

இனிமேல் இணக்க அரசியலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது பாதையாக இருக்கும் என்பதைத் தேர்தல் வாக்குறுதியாகத் தலைவர் சம்பந்தன் மக்களுக்குக் கூறியிருப்பது வரவேற்கப்பட வேண்டியதுதான்.

ஆனால் கூட்டமைப்பிற்குள் உள்ள கட்சிகளிடமும் தனித்தனி நபர்களிடத்திலும் ஒற்றுமை கொஞ்சமேனும் இல்லாத காரணத்தாலும், கைநீட்டி நிதி பெற்றுக்கொள்ளும் புலம்பெயர் தீவிரவாத அமைப்புக்களை மீற இயலாததாலும், தேர்தலுக்குப் பின் இவர்கள் தீர்வைப் பற்றிப் பேசுவதை நிறுத்தி விடுவார்கள் என்பதே சிக்கல்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன், தேசிய நிறைவேற்றுச் சபையை அமைத்து அதன்மூலம் 2015 க்குள் நிச்சயம் தீர்வு காண்போம் என்று வாக்குறுதியளித்ததை அதற்குள் யாரும் மறந்துவிட முடியாது.

ஆனால் தேர்தல் முடிந்து இந்த ஆறு மாதத்திலும், தேசிய நிறைவேற்றுச் சபையில் இருந்துகொண்டும், தீர்வைப் பற்றி எதுவும் பேசாமலே காலத்தைக் கடத்தினார்கள்.

கூட்டமைப்பில் உள்ளவர்களால் ஒத்தபடி ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முடியாமலிருப்பதும், நடைமுறைச் சாத்தியமற்ற கனவுகளில் இருக்கும் தீவிரவாதப் புலம்பெயர் அமைப்புகளின் நிதியில் தங்கியிருப்பதால் தனிநாட்டுக்குக் குறைந்த தீர்வை வரையறுத்துச் சொல்ல முடியாமலிருப்பதும் தான் காரணங்கள்.

இந்தத் தேர்தலில் வென்றாலும், அதன்பிறகும் இவர்கள் தீர்வுப் பேச்சை எடுக்காமல் காலங் கடத்துவதற்கு என்னென்ன வீரவசனங்களைப் பேசவேண்டுமோ அவற்றைத்தான் அடுத்த ஐந்து வருடத்துக்கும் பேசிக் கொண்டிருப்பார்கள்.

தீர்வை எடுப்பதோ தமிழ் மக்களை இந்த நாட்டில் சம உரிமைகளுடன் வாழச் செய்வதோ இவர்களால் இயலாது. அதற்கான யதார்த்தபூர்வ சிந்தனையோ திராணியோ இவர்களிடம் இல்லை என்பதுதான் உண்மை. - ஆசிரியர்

## பாதுகாப்பான குடிநீர் வசதிக்கு இலங்கைக்கு உலகவங்கி உதவி

இலங்கையில் பாதுகாப்பான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளுக்கு ஆதரவளிப்பதாக உலக வங்கி அறிவித்துள்ளது. உலக வங்கியினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக வங்கி உள்ளூர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதுகாப்பான குழாய் நீர் விநியோகம் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளுக்காக இலங்கையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, நுவரெலியா, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் 165 அமெரிக்க டொலர் நிதியை முதலீடு செய்ய உலக வங்கி முன்வந்துள்ளது.

2020ஆம் ஆண்டளவில், சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதுகாப்பான குழாய் நீர் விநியோகம் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளைப் பெறுவார்கள் என்ற இலங்கையின் இலக்கை இத்திட்டத்தின் கீழ் அடையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கையில் பாதுகாப்பான குழாய் நீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளைப் பெறுவோரின் எண்ணிக்கை 45 வீதத்திலிருந்து 60 வீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் மூலம் பயனாளிகள் நீர் பெறுவதற்கு அலையும் நீண்ட நேரத்தை மீதப்படுத்துவதோடு அந்த நேரத்தை வேறு உபயோகமான வழிகளில் செலவிடலாம் என்பதும் இலக்காக உள்ளது.

அத்துடன், இலகுவில் பாதிக்கப்படக் கூடிய சிறுவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு நீரினால் ஏற்படும் உபாதைகளைத் தடுத்துக் கொள்ளவும் இத்திட்டம் இன்னொரு புறத்தில் உதவும்.

அத்துடன், நீரின் மூலம் பரவும் நோய்களைக் குணப்படுத்துவதற்காக செலவிடுகின்ற பணத்தை ஆக்கபூர்வ வழிகளுக்குச் செலவிடவும், வீட்டு வருமானத்தை அதிகரிக்கவும் நேரத்தை மீதப்படுத்தி எதிர்மறைத் தாக்கத்தை குறைக்கவும், இலங்கைக்கு அண்மைக் காலமாக சவாலாக இருந்து கொண்டிருக்கின்ற சிறுநீரக நோய்க் காரணிகளை எதிர்கொள்வதற்கும் இத்திட்டம் பாரியளவில் தாக்கம் செலுத்தும் எனவும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எந்த உருவத்தில் போட்டியிட்டாலும் மகிந்தவை தோற்கடிப்போம்

### - மனோகணேசன் சூளுரை -

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் கொண்டு வந்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொதுவேட்பாளராக்கும் முயற்சிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நடவடிக்கையின் நிமித்தம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, கட்சியின் உள்ளே கடும் அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. இது வரை ஜனாதிபதியின் பெயருக்கு எந்தவொரு களங்கமும் இல்லை. மகிந்தவைச் சேர்த்துக் கொண்டால், நிச்சயம் அவர் பெயருக்கு களங்கம் ஏற்படும்.

சுதந்திரக் கட்சியூடாக தேர்தலில் போட்டியிட வேண்டும். நாடாளுமன்றம் செல்ல வேண்டும். பிரதமராக வேண்டும் என்பது தான் மகிந்தவின் கனவு. அதற்கு ஜனாதிபதி இடம்கொடுக்கக் கூடாது என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படு இயக்கத்தின் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இச்சந்திப்பில் மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசனும் உடனிருந்தார்.

விடுதலைப் புலிகளை அழித்ததாகப் பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்து நாட்டை அழித்துச் சின்னாபின்னமாக்கியவரே மகிந்த ராஜபக்ஷ அவரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றி நல்வழிப்படுத்த வேண்டும் என்றே 62 இலட்சம் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து, ஜனாதிபதியாக்கினார்கள்.

எனவே, ஒரு போதும் மகிந்தவுடன் மைத்திரி சேரக்கூடாது என்றும் அசாத் சாலி மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் வன்முறைகள் ஆரம்பம் இரத்தினபுரியில் ஒருவர் வெட்டிக்கொலை

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குச் சென்று கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரளவின் ஆதரவாளர் ஒருவர் இரத்தினபுரியில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

துஷார தேவாலேகம (வயது - 37) என்ற குறித்த நபர், நேற்றுமுன்தினம் (செவ்வாய்க் கிழமை) இரவு இனந்தெரியாதோரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவமானது இரத்தினபுரி - தெய்யன்கேதால பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள், தலதாவின் ஆதரவாளரை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். பின்னர், கடும் வெட்டுக் காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர், இரத்தினபுரி மாவட்டத்தில் காணப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திராணி பண்டாரவின் பதாகைகள் சேதமாக்கப்பட்டுள்ளதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே தெரிவித்துள்ளது.

அத்துடன், குருநாகலில் வைக்கப்பட்டிருந்த ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க மற்றும் பிரதமர் ரணில் ஆகியோரின் பதாகைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக 'கபே' தெரிவித்துள்ளது.

## மகிந்தவுக்கு எதிராக 7000 முறைப்பாடுகள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக, 7000 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு, குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் ஏனைய விசாரணைப் பிரிவுகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்ய போதிய அதிகாரிகள் இல்லாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அதிகமானவை, கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பர்கவே காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

அதுவும் கடந்த அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்களே அதிக முறைப்பாடுகளை செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

புதிய அரசாங்கம் பதவியேற்றபின்னர் ஸ்தாபிக்கப்பட்ட பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில், மகிந்த மற்றும் கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மகிந்தவுக்கு நெருக்கமானவர்கள் என பலர் மீது முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு கைதுகளும் இடம்பெற்று வருகின்றன.இந்நிலையில், பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்ட விரோதமானதெனவும், அது அரசியல் பழிவாங்கும் செயற்பாட்டிற்காக அமைக்கப்பட்டதாகவும் எதிர்க் கட்சியினர் குற்றஞ்சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# 20 இன் கீழ் தேர்வு நடைபெறும் விதம்

■ எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து

தேர்தல் முறை சீர்திருத்தத்துக்கான அரசியலமைப்புத் திருத்தத்தின் 20 ஆவது நகல் வரைவு வர்த்தமானியில் கடந்த 12ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

புதிய தேர்தல் முறை விகிதாசார மற்றும் தொகுதிவாரி தேர்தல் முறைகளின் கலப்பு முறையொன்றாகும். சகல அரசியல் கட்சிகளாலும் வெறுக்கப்பட்ட விருப்ப வாக்கு முறை இந்தத் தேர்தல் முறைமையில் இல்லை.

அதற்குப் பதிலாக தொகுதி வாரியாகவும் விகிதாசார முறையிலும் தேசிய பட்டியல் மூலமாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இந்த அமைப்பை எவரும் எதிர்க்கவில்லை. தொகுதிகளின் எண்ணிக்கையிலேயே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் முன் தொகுதி வாரியாக மட்டுமே நாட்டில் தேர்தல்கள் நடைபெற்றன. அப்போது 160 தேர்தல் தொகுதிகள் இருந்தன.

அந்தத் தொகுதிகள் வாரியாக 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேர்தல்கள் நடைபெறாவிட்டாலும் அவை உத்தியோகபூர்வமாக முற்றாக மறுக்கப்படவில்லை. விகிதாசார முறையில் தேர்தல்கள் நடைபெற்றாலும் தேர்தல்களை அடுத்து வாக்குகளை எண்ணும் போது பழைய தொகுதி வாரியாக அவற்றை முதலில் எண்ணி தொகுதி வாரியாக முடிவுகளை முதலில் வெளியிடுவது தேர்தல் திணைக்களத்தின் வழமையாக இருந்து வந்துள்ளது.

விகிதாசார தேர்தல் முறையில் அவ்வாறு தொகுதி வாரியாக முடிவுகளை வெளியிடுவதில் அர்த்தமே இல்லை.

ஆனால், நாடாளுமன்ற தேர்தலின் போது மட்டுமல்லாது ஜனாதிபதித் தேர்தலின் போதும் தேர்தல் திணைக்களம் பழைய தொகுதி வாரியாக முடிவுகளை மட்டுமன்றி மாவட்ட முடிவுகளையும் வெளியிட்டுவிட்டுத் தான் ஒட்டுமொத்த முடிவை வெளியிடுகிறது.

ஏதோ ஒரு காரணத்துக்காக தேர்தல் திணைக்களம் அந்த நடைமுறையை கடந்த 37 ஆண்டுகளாக கடைப்பிடித்து வந்துள்ளது. அதன் காரணமாக பழைய 160 தொகுதிகள் மக்கள் மனதில் இருந்து அகன்றுவிடவில்லை. அவற்றின் எல்லைகளைப் பற்றி அரசியல் கட்சிகளுக்கிடையே முரண்பாடுகளும் இல்லை.

ஆனால், உத்தேச தேர்தல் முறையின் கீழ் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 160இலிருந்து 145 ஆக குறைகிறது. ஐ.தே.க இந்த எண்ணிக்கை மேலும் குறைத்து 125 ஆக வேண்டும் என்கிறது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 160 தொகுதிகள் இருக்க வேண்டும் என்கிறது.

சிறுபான்மை கட்சிகள் இந்த விடயத்தில் இரண்டும்கெட்ட நிலையில் இருக்கின்றன. தொகுதிகளை அதிகரித்து தொகுதி வாரியாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டால் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் குறையலாம். தொகுதிகளை குறைத்தால் புதிய தொகுதி நிர்ணயத்தின் போது அவர்கள் பாதிக்கப்படலாம்.

விகிதாசார முறையின் கீழ் நடைபெற்றதைப் போலவே உத்தேச முறையின் கீழும் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டே வாக்கெடுப்பு நடைபெறும். இப்போது போலவே அரசியல் கட்சிகள் தமது மாவட்ட வேட்பாளர் பட்டியல்களை சமர்ப்பிக்கும்.

**ஒரு கட்சி குறிப்பிட்டதோர் மாவட்டத்தில் சகல தொகுதிகளிலும் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால், விகிதாசார ரீதியாக பார்த்தால் அக்கட்சி அம் மாவட்டத்திலிருந்து மொத்தமாக பெற்ற வாக்குகளின்படி அக் கட்சிக்கு ஒரு சில ஆசனங்கள் கிடைக்க வேண்டும். புதிய முறைப்படி அக் கட்சிக்கு அவ்வாறு கிடைக்க வேண்டிய ஆசனங்கள் மாவட்ட தேர்வின் போதும் தேசிய பட்டியல் மூலமாகவும் வழங்கப்படும்.**

ஆனால், அப்பட்டியல்களை தயாரிக்கும் போது தொகுதி வாரியாக போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை தனியாக குறிப்பிட்டு ஏனைய வேட்பாளர்களின் பெயர்களோடு தேர்தல் ஆணையாளர்களிடம் சமர்ப்பிக்கும்.

வாக்காளர்கள் அவரவரது கட்சிக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும். தற்போது போல் கட்சிக்கு வாக்களித்துவிட்டு தாம் விரும்பும் வேட்பாளர்களின் இலக்கத்தின் மீதும் புள்ளடியிடத் தேவையில்லை. அதாவது விருப்புவாக்கு முறை ஒழிக்கப்படுகிறது.

வாக்குகளை எண்ணும் போது இப்போது போலவே தொகுதி வாரியாக அவை எண்ணப்படும். குறிப்பிட்டதோர் தொகுதிக்கு பல கட்சிகள் தத்தமது வேட்பாளர்களை நியமித்து இருக்கும். அவர்களில் ஆகக் கூடுதலாக வாக்குகளைப் பெற்றவர் அத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராவார்.

இவ்வாறு மாவட்டத்தின் சகல தொகுதிகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

ஒரு கட்சி குறிப்பிட்டதோர் மாவட்டத்தில் சகல தொகுதிகளிலும் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால், விகிதாசார ரீதியாக பார்த்தால் அக் கட்சி அம் மாவட்டத்திலிருந்து மொத்தமாக பெற்ற வாக்குகளின் படி அக்கட்சிக்கு ஒரு சில ஆசனங்கள் கிடைக்க வேண்டும். புதிய முறைப்படி அக் கட்சிக்கு அவ்வாறு கிடைக்க வேண்டிய ஆசனங்கள் மாவட்டத் தேர்வின் போதும் தேசிய பட்டியல் மூலமாகவும் வழங்கப்படும்.

உதாரணமாக மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி பதுளை மாவட்டத்திலிருந்து விகிதாசாரப்படி 4 ஆசனங்களை பெற வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அக் கட்சியின் எந்தவொரு வேட்பாளரும் தொகுதி வாரியாக தெரிவு செய்யப்படவில்லை என்றும் வைத்துக் கொள்வோம்.

எனவே, அக் கட்சியின் தோல்வியடைந்த வேட்பாளர்களில் தொகுதி வாரியாக கூடுதலான வாக்கு சதவீதத்தை பெற்ற நான்கு வேட்பாளர்கள் அந்த நான்கு ஆசனங்களுக்கு தெரிவு செய்யப்படுவர்.

அக் கட்சி வெலிமடை, ஊவா-பரணகம, ஹாலிஎல, பதுளை, பண்டாரவளை. ஹப்புத்தளை மற்றும் வியலுவ ஆகிய தொகுதிகளில் இருந்து முறையே 15;14,13,12.11, 10 மற்றும் 9 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது என்று வைத்துக் கொள்வோம்.

அவ்வாறாயின் ஆகக் கூடுதலான சதவீதத்தை பெற்ற வெலிமடை, ஊவா-பரணகம, ஹாலிஎல மற்றும் பதுளை ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்கள் எம்.பிக்களாக தெரிவு செய்யப்படுவர். கட்சி தொகுதிகளில் இழந்ததை மாவட்ட முடிவு ஈடு செய்யும்.

ஐ.தே.க அதற்கு விகிதாசாரப்படி பதுளை மாவட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய ஆசன எண்ணிக்கையை விட கூடுதலான ஆசனங்களை தொகுதி வாரியாக பெற்றிருக்கலாம். அவ்வாறாயின் அக்கட்சிக்குரிய தேசிய பட்டியல் உறுப்பினர் எண்ணிக்கையில் அந்த மேலதிக உறுப்பினர் எண்ணிக்கை குறைக்கப்படும். இது தான் புதிய முறையின் சாரம்.

இதன்படி ஒரு கட்சி மாவட்ட ரீதியாக விகிதாசார முறைப்படி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அக் கட்சிக்கு நாடாளுமன்ற ஆசனங்கள் கிடைக்கும். அதேவேளை தொகுதிகளுக்கு வகை சொல்லும் எம்.பிக்களும் இருப்பர்.

பார்த்தால் இந்த முறை நியாயமானதாகத் தான் இருக்கிறது. ஆனால், இதில் நடைமுறைப் பிரச்சினைகள் இருப்பதாகவே சிறுபான்மை கட்சிகள் கூறுகின்றன. இப்போது தொகுதி வாரியாக வேட்பாளர்கள் நிறுத்தப்படாததினால் குறிப்பிட்டதோர் மாவட்டத்தில் வாழும் ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் எல்லோரும் அக் கட்சிக்கே வாக்களிப்பர்.

ஆனால், தொகுதி வாரியாக வேட்பாளர்கள் நியமிக்கப்பட்டபோது சில வாக்காளர்கள் தமது கட்சிக்கு வாக்களிப்பதை விட வெற்றி வாய்ப்பு உள்ள வேட்பாளருக்கு வாக்களிக்கவே விரும்புவர். இது சிறுபான்மை மக்களை பாதிக்கலாம்.

உதாரணமாக பதுளை தொகுதியில் வாழும் ஒருவர் தற்போதைய விகிதாசார தேர்தல் முறையின் படி தேர்தல் நடந்தால் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்களிப்பார் என்று வைத்துக் கொள்வோம்.

ஆனால், புதிய முறைப்படி அத் தொகுதிக்கு ஐ.தே.க சார்பில் தற்போதைய ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ போட்டியிட்டால் அதே வாக்காளர் ஹரீனுக்கு வாக்களிக்க முற்படலாம். இதனால், ஜனநாயக மக்கள் முன்னணி, பதுளை தொகுதியிலிருந்து பெறும் வாக்குகள் மட்டுமன்றி பதுளை மாவட்டத்திலிருந்து பெறும் வாக்குகளும் குறையும்.

மேற்படி உதாரணத்தை மீண்டும் எடுத்துக் கொண்டால் இவ்வாறு பல தொகுதிகளில் வாக்குகள் குறைவதால் விகிதாசார தேர்தல் முறைப்படி பதுளை மாவட்டத்தில் இருந்து 4 ஆசனங்களைப் பெற வேண்டிய ஜனநாயக மக்கள் முன்னணி புதிய முறைப்படி 4 ஆசனங்களுக்கு குறைவாகப் பெறலாம். அக் கட்சி, தொகுதிகளில் இழந்ததை மாவட்டம் ஈடு செய்யும் என்றாலும் மாவட்டம் குறைவாகவே ஈடு செய்யும்.

இதற்காகத் தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரட்டை வாக்குச் சீட்டு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என கூறியது. இப்போது அந்தக் கருத்தை பல சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன. அந்த யோசனையின் படி மேற்படி பதுளை தொகுதி வாக்காளர், ஹரீனுக்கு ஒரு வாக்கையும் தாம் விரும்பும் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு ஒரு வாக்கையும் அளிக்க முடியும். புதிய முறைப்படி சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் எதிர் நோக்கும் பிரச்சினைக்கு இது ஓரளவுக்குத் தான் பரிகாரமாகலாம்.

ஏனெனில், தமது கட்சியை விட்டு ஹரீனுக்கு வாக்களிக்க முற்பட்ட ஒருவர் அத்தோடு தமது இரண்டாவது வாக்குச் சீட்டை பாவித்து ஹரீனின் கட்சிக்கும் வாக்களிக்க முற்படலாம். தேர்தல் சூட்டோடு அவரது மனதில் இவ்வாறானதோர் மாற்றம் ஏற்பட இடமுண்டு.

எந்தத் தேர்தல் முறையில் தேர்தல் நடைபெற்றாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கிலும் கிழக்கிலும் தமக்குரிய ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும். முஸ்லிம் காங்கிரஸும் கிழக்கில் தமக்குரிய ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும். சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் பார்த்தால் அந்த இரு மாகாணங்களில் தமிழ் முஸ்லிம் பிரதிநிதித்துவம் அவ்வளவாக குறையாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இயங்கும் சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் தான் புதிய முறையினால் வெகுவாக பாதிக்கப்படப் போகின்றன. எனவே தான் புதிய முறையினால் இரு பிரதான கட்சிகள் மட்டுமே எதிர்காலத்தில் அரசியல் களத்தில் மீதமாகியிருக்கும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க அண்மையில் கூறியிருந்தார்.

# மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் குற்றவாளியாக இனங்காணப்படவில்லை

## - ரோசி சேனாநாயக்க தெரிவிப்பு -



(கொழும்பு)

கோப் குழுவின் செயற்பாடுகள் நிறுத்தப்படும்வரை, மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் குற்றவாளியாக இனங்காணப்படவில்லையென சிறுவர் மற்றும் மகளிர் விவகார ராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொது நிறுவனங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் நாடாளுமன்ற கோப் குழுவானது, மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறிகள் தொடர்பான விசாரணைகளை நடத்திவந்தது.

மத்திய வங்கியின் மோசடி தொடர்பில் அர்ஜுன் மகேந்திரன் குற்றவாளியாக இனங்காணப்பட்ட காரணத்தாலேயே, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதனை நிராகரித்துள்ள ரோசி சேனாநாயக்க, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாலேயே கோப் குழுவின செயற்பாடு செயலிழந்துள்ளது. நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரை அர்ஜுன் மகேந்திரனை கோப குழு குற்றவாளியென குறிப்பிடவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.

கோப் குழுவில் ரோசி சேனாநாயக்கவும் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## - மெதமுலன இல்லத்திலிருந்து -

# தேர்தலை இலக்கு வைத்து ராஜபக்ஷ இன்று விசேட உரை



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று முற்பகல் 10.30 மணியளவில், தமது வீரகெட்டிய மெதமுலன இல்லத்திலிருந்து விஷேட உரையொன்றை ஆற்றுகின்றார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை மையப்படுத்தி இந்த உரை அமையவுள்ளது. தேர்தல் தொடர்பான தமது இறுதி அறிவிப்பை இன்று அறிவிப்பாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், மகிந்தவை பிரதமர் வேட்பாளராக களமிறக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதன்போது மகிந்தவை சந்திப்பாரென கூறப்படுகிறது.

இதேவேளை மகிந்தவை சந்திக்கவென இன்று மாத்தறையிலிருந்து வாகனத் தொடரணியொன்றும் செல்ல ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் அநுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த மற்றும் எதிர்க்கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் சுமார் 3 மணித்தியாலங்கள் கலந்துரையாடி அதன் பின்னர் ஜனாதிபதியை சந்தித்து சுமார் 4 மணித்தியாலங்கள் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இதன்போதும் மகிந்தவுக்கு சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நிலை ஜனாதிபதியால் மறுக்கப்பட்டதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், மகிந்தவுக்கு பிரதமர் வேட்பாளர் நிலை மறுக்கப்பட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச செயலாளர் சுசில் பிரேமஜயந்த மகிந்த அணியுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இன்றைய தினம் அரசியல் மேடையில் பல மாற்றங்கள் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜனநாயகத்தின் பாதையில் பயணிக்கின்றது நாடு

## - சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு -



(கொழும்பு)

சர்வாதிகார பாதையில் இருந்து விடுபட்டு நாடு இன்று ஜனநாயகத்தின் பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. மீண்டும் மகிந்தவின் கையில் நாட்டைக் கொடுத்தால் அழிவு நிச்சயம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்

ஐக்கிய மககள் சுதந்திர முன்னணியில் ஏற்பட்டிருக்கும் பிரதமர் வேட்பாளருக்கான போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் கூறுகையில்

கடந்த பத்து ஆண்டுகளாக இந்த நாடு பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. பயங்கரவாத யுத்தத்தை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது, அதேபோல் சர்வதேச அழுத் தங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது

அதேபோல் சர்வாதிகார ஆட்சியாளர்களின் கடும்போக்கு அரசியலுக்கும் நாடு முகம் கொடுத்தது. வெறுமனே யுத்தத்தை வெற்றிகொண்டு நாட்டை ஆயுத போராட்டத்தில் விடுவித்ததாக கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றிய மகிந்த கூட்டணி நாட்டை அழிவின் பாதையில் கொண்டு சென்று விட்டது

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதில் நாமும் ஆவலோடு இருந்தோம். யுத்தம் நடத்தப்படாது இடைநடுவே புலிகளுக்கு ஆதரவாக அரசாங்கம் செயற்பட ஆரம்பித்த போது ஜாதிக ஹெல உமையவேறு தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாம் கொடுத்த அழுத்தத்தின் காரணத்தினால் தான் அரசாங்கம் தொடர்ந்து யுத்தத்தை முன்னெடுத்தது

யுத்தம் முடிவடைந்தவுடன் நாட்டை மாற்றுப் பாதையில் கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருந்தும் முன்னைய அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் தமது அதிகார ஆசையில் சர்வாதிகார ஆட்சியை கடுமையாக்கியமையும் நாட்டில் அதிகாரக் குவிப்பை மேற்கொண்டமையுமே நாம் மகிந்தவின் அரசாங்கத்தில் இருந்து வெளியேற பிரதானமான காரணமாக அமைந்தது

கடந்த ஜனவரி மாதம் இந்த நாட்டில் மிக முக்கிய மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இது வரை காலமும் சர்வாதிகாரமாக பயணித்த ஆட்சிப் பாதை கடந்த ஜனவரி மாதம். ஜனாதிபதித் தேர்தலுடன் ஜனநாயகத்தின் பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் பிரதான கட்சிகளாக ஒன்றிணைத்து ஏனைய தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகளையும் ஒன்றிணைத்து இந்த ஆட்சியை அமைத்துள்ளோம்

இந்த ஆட்சியில் நாடு சரியான பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. ஆகவே இப்போது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுடன் மீண்டும் பல கட்சி அரசியல் முறைமை உருவாக்கும் சர்வாதிகாரப் போக்கு இல்லாத, அனைத்துக் கட்சிகளுக்கும் முன்னுரிமை வழங்கும் வகையில் சரியானதொரு அரசியல் முறைமை உருவாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்றார்

# உலக அமைதிச் சுட்டியில் இலங்கைக்கு பின்னடைவு

உலக அமைதிச் சுட்டியில் இலங்கைக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான உலக அமைதிச் சுட்டியில், இலங்கை 114ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவை தளமாகக் கொண்ட, பொருளாதார மற்றும் அமைதிக்கான நிறுவகம் ஆண்டு தோறும் உலக அமைதிச் சுட்டி என்ற பட்டியலை வெளியிட்டு வருகிறது.

162 நாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், 2015 ஆம் ஆண்டுக்கான உலக அமைதிச் சுட்டி தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை 114 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் இலங்கை 105ஆவது இடத்தில் நிலைப்படுத்தப்பட்டிருந்தது.

அதற்கு முன்னர், 2013ஆம் ஆண்டில், இலங்கை 109ஆவது இடத்தில் இருந்தது.

இம்முறை இலங்கை கடந்த ஆண்டை விட, ஒன்பது இடங்கள பின்தள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் தெற்காசியாவில் பூட்டான் 18ஆவது இடத்திலும், நேபாளம் 62அவது இடத்திலும், பங்களாதேஷ் 84ஆவது இடத்திலும், இந்தியா 143 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 154ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 160 ஆவது இடத்திலும் உள்ளன.

மிகவும் அமைதியான நாடுகளாக ஐஸ்லாந்து, டென்மார்க், ஒஸ்ரியா ஆகிய நாடுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன

அதேவேளை, அமெரிக்கா 94 ஆவது இடத்திலும், சீனா 124 ஆவது இடத்திலும் இருப்பது குறிப்பிடதக்கது

# பொதுஜன பெரமுனவின் சின்னம் "நாகபாம்பு"

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள பொது பல சேனா அமைப்பின் அரசியல் கட்சியான பொது ஜன பெரமுன "நாகபாம்பு சின்னத்தில்" போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்று அதிகாரி திழந்த விதானகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தமது கட்சி நாகபாம்பு சின்னத்தை தெரிவு செய்து தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கியுள்ளதாகவும், இன்று அந்த சின்னத்துக்கு அனுமதி கிடைக்கும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்ற போது

மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட

# வலி.வடக்கு பகுதிகளிலிருந்து படையினரை வெளியேற்றுங்கள்

## சந்திரகுமார் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்டு மக்களை மீள்குடியமர்விற்கு அனுமதித்த 1013 ஏக்கர் காணிகளிலிருந்தும் இதுவரை படையினர் முற்றாக வெளியேறவில்லை ஆனால் அவர்களை வெளியேற்றுவதற்கு புதிய அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. படையினருக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமுடைய அரசாங்கம் ஏன் தமது ஆளுமையை இதுவரை பயன்படுத்தவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுபபினர் மு.சந்திரகுமார் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனிடம் கேள்வி எழுப்பியுள்ளார். நேற்றுமுன்தினம் யாழ. மாவட்ட செயலகத்தில் நடைபெறற மீள் குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு படையினரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் அதுதொடர்பாக ஜனாதிபதி பிரதமமந்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் ஆனாலும் படையினரை வெளியேற்ற முடியாதுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்த கருத்திற்கு பதிலளித்து உரையாற்றும்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்

நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இணைந்து மக்ளை உத்தியோக பூர்வமாக மீள்குடியேற்றிய காணிகளிலிருந்து இதுவரை படையினர் வெளியேறவில்லை என்பது ஆச்சரியத்திற்குரிய விடயமே ஏனெனில் படையினருக்கு கட்டளை பிறப்பிக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டு எனினும் கட்டளையிட்டும் படையினர் ஏற்கவில்லை என்பது ஆச்சரியத்தை அளிக்கின்றது.

ஆனால் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில்தான் 59 படைமுகாம்கள் அகற்றப்பட்டதாகவும் இன்றைய ஆட்சியில் படைமுகாம்கள் எவையும் அகற்றப்படவில்லை எனவும் இன்றுள்ள அமைச்சர்களே குறிப்பிடுகின்றனர். எனவே அரசாங்கம் தமது முழு ஆளுமையையும் பிரயோகித்து எமது மக்களின் நிலங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்ட அவர்.

மீள்குடியேறி வரும் மக்களுககான உலருணவுக் கொடுப்பனவுகள் அவர்களுக்கான தற்காலிக வீடுகளை வழங்குதல் மற்றும் அவர்களின் சுகாதார நலன்களை கருத்தில்கொண்டு தரமான மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்தல் தொடர்ந்து அம்மக்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டங்களை வழங்குதல் போன்ற விடயங்களிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டதோடு மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த இலவச மின்சாரம் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் அதனை மீளவும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன் மற்றும் மீளகுடியேற்ற அமைச்சின் செயலாளர் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் இவர்களுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன், சரவணபவன், அப் பாததுரை விநாயகமூர்த்தி மற்றும் வடக்கு மாகாணசபையின் அமைசசர்கள் உறுப்பினர்கள், படை அதிகாரிகள எனப்பலர் கலந்து கொண்டனர்

இதேவேளை இக் கலந்துரையாடலுக்கு முன்னதாக மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவினர் வலி. வடக்கில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதித்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு அங்கு படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டனர்.

## இ.போ.ச பேருந்தின் மீது கட்டப்பிராயில் தாக்குதல்

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 750 வழித்தட பேருந்து கட்டப்பிராய் பகுதியில நேற்றுமுன்தினம் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

யாழிலிருந்து புறப்பட்ட பேருநதில் பயணித்த பயணிகளில் ஒரு சிலபேர் கட்டைப்பிராய் பகுதியில நிறுத்தச் சொன்ன வேளையில் பேருந்து சற்றுத்தள்ளி நிறுதப்பட்டதை காரணமாக வைத்தே இறங்கிய நபர்கள் அவ்விடத்தில் நின்ற மேலும் ஒரு சிலபேரைச் சேர்த்துக் கொண்டு கற்களால் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் பேருந்து நடத்துநர கையில் காயமுறறதுடன் இது தொடர்பாக பேருநதின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் கோப்பாய் பொலிஸாரிடம் முறையீடு செய்துள்ளதாகத தெரிவிக்கப்படுகினறது. (18)

## ஞானச்சுடர் வெளிவந்தது

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகனின் வரலாற்றுச் சிறப்பை எடுத்தியம்பும் ஞானச் சுடர் யூன் மாத இதழ் வெளியாகியுள்ளது.

சந்நிதியான் ஆசிரம சைவ கலை பண்பாட்டுப் போரவை மாதந் தோறும் வெளியிட்டுவரும இந்த ஞானச்சுடர் சஞ்சிகையில் இம்முறையும் வழமையான அம்சங்களோடு புதிய சிறப்புக் கட்டுரைகளும் வெளியாகியுள்ளன.

சங்ககாலப் புலவர்களின் வரலாற்றை விளக்கும் நா.நல்லதம்பி எழுதிய புலமையும் வறுமையும் கட்டுரையும் வெளியாகியுள்ளது.


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு 02.07.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




- கலைந்தது நாடாளுமன்றம் அரசியல் சமர் ஆரம்பம்
- கிழக்கு பல்கலையில் குழப்பங்கள்!
- கிரீஸின் நிதிச் சீரழிவு!
- நல்லாட்சியும் ஏமாற்றங்களும்



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

நண்பரே நா காக்க...

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இறுதிக்கு முன்னேறியது சிலி

(சான்டியாகோ)

கோபா அமெரிக்க கால்பந்துப் போட்டியில் 28 ஆண்டுகளுக்குப் பிறகு இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது சிலி. 44 ஆவது கோபா அமெரிக்க கோப்பை கால்பந்துப் போட்டி சிலியில் நடை பெற்று வருகிறது.

இதன் முதல் அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் போட்டியை நடத்தும் சிலி-பெரு அணிகள் மோதின. இரு அணிகளும் சம பலத்துடன் மோதியதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டதால் ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் பெரு வீரர் கார்லோஸ் ஜம்ரோனோ நடுவரால் எச்சரிக்கப்பட்டார். அவருக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. 21 ஆவது நிமிடத்தில் அவர் மீண்டும் நடுவரால் எச்சரிக்கப்பட்டார்.

2 ஆவது மஞ்சள் அட்டை பெற்றதால சிவப்பு அட்டையாக கருதப்பட்டு அவர் ஆடுகளத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். இதனால் 10 வீரர்களுடன் விளையாடும் நிலை பெரு அணிக்கு ஏற்பட்டது. இது பாதிப்பை ஏற்படுத்தியது.

முதல் பாதி ஆட்டம் முடியும் நேரத்தில் சிலி அணி கோல் அடித்தது. அந்த அணியைச் சேர்ந்த எட்வர்டோ வார்கஸ் 42 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் சிலி அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. 2 ஆவது பகுதி ஆட்டத்தில் சிலி வீரர் கேரிமெடல் செய்த தவறால் சேம்சைட் கோலானது.

61 ஆவது நிமிடத்தில் விழுந்த இந்த சுயகோலால் சிலி அணி அதிர்ச்சி அடைந்தது. இதன்மூலம் 1-1 என்ற சமநிலை ஏற்பட்டது.




இதனால் சிலி வீரர்கள் ஆக்ரோஷத்துடன் முன்னேறித் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மேலும் 3 ஆவது நிமிடத்தில் சிலி அணி 2 ஆவது கோலை அடித்தது. வார்கஸ் தான் இந்தக் கோலையும் அடித்தார். 64 ஆவது நிமிடத்தில் இந்தப் கோல் விழுந்தது. இதன்மூலம் சிலி அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

ஆட்டம் முடியும் வரை பெரு அணி பதில் கோல் அடிக்க கடுமையாகப் போராடியது. ஆனால் அது இயலவில்லை. இறுதியில் சிலி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

சிலி அணி வெற்றி பெற்றதும் மைதானத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் ஆரவாரம் செய்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

சிலி அணி 28 ஆண்டுகளுக்கு பிறகு கோபா அமெரிக்க போட்டியில் இறுதிக்கு முன்னேறி இருக்கிறது. கடைசியாக 1987 ஆம் ஆண்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறி இருந்தது. 2 ஆவது அரை இறுதி ஆட்டத்தில், 14 முறை சம்பியனான ஆர்ஜென்ரீனா 2 தடவை கோப்பையை வென்ற பராகுவே அணிகள் மோதுகின்றன.

பராகுவேயை வீழ்த்தி 27 ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு நுழையும் ஆர்வத்துடன் ஆர்ஜென்ரீனா உள்ளது. ஆனால் அந்த அணிக்கு பராகுவே எல்லா வகையிலும் சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இரு அணிகளும் "லீக்" ஆட்டத்தில் மோதி இருந்தன. இந்த ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

## டில்ஷானின் தலையை பதம் பார்த்த பவுன்சர்

கரீபியன் லீக் போட்டியில் பவுன்சர் பந்து இலங்கை வீரர் டில்ஷானின் ஹெல்மெட்டை தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

6 ஆவது லீக் ஆட்டத்தில் லூசிய சூக்ஸ் - குயான அமாசன் வாரியஸ் அணிகள் மோதின. இதில் முதலில் விளையாடிய லூசிய சூக்ஸ் அணி 18 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 156 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய அமாசன் வாரியஸ் அணிக்கு சிம்மோன்ஸ், டில்ஷான் தொடக்க ஆட்டக்காரர்களாக விளையாடினர். இருவரும் அதிரடி காட்டினர்.

இந்நிலையில் 3.3 ஓவரில் ரோச் வீசிய ஒரு பவுன்சர் பந்து டில்ஷானின ஹெல்மெட்டைத் தாக்கியது. இதில் வலது கண்ணிற்கு சற்று மேல் பகுதியில் காயம் ஏற்பட டில்ஷான் களத்தை விட்டு வெளியேறினார். இவர் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

இவரைத் தொடர்ந்து வந்தவர்களும் அதிரடி காட்டினர். இருப்பினும் அந்த அணியால் 18 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 154 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் லூசிய சூக்ஸ் அணி 2 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

## பந்துவீச்சில் தாமதம் இலங்கை வீரர்களுக்கு அபராதம்



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது பந்து வீசுவதற்கு தாமதம் ஏற்படுத்தியதாக இலங்கை வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸிற்கு போட்டிச் சம்பளத்திலிருந்து 20 சதவீதமும் ஏனைய வீரர்களுக்கு 10 சதவீதமும் சர்வதேச கிரிக்கெட் சபையினால் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர், 5 ஒருநாள் போட்டித் தொடர் மற்றும் இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகளில் விளையாடி வருகின்றது.

அந்தவகையில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த 25 ஆம் திகதி ஆரம்பித்து கொழும்பில் நடைபெற்று வந்தது. நேற்று முன்தினம் நிறைவடைந்த இப்போட்டியில் 7 விக்கெட்டுகளால் இலங்கை வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பல்லேகலவில் ஆரம்பமாகவுள்ளது.

## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் 2 ஆவது சுற்றில் வாவ்ரிங்கா, சபரோவா

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் வாவ்ரிங்கா, சபரோவா 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர். கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டன் நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

உலகின் 4 ஆம் நிலை வீரரான வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) முதல் சுற்றில் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த ஜோ சவுசாவை எதிர்கொண்டார். இதில் வாவ்ரிங்கா 6-2, 7-5, 7-6 (7-3) என்ற நேர்செட் கணக்கில் வென்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.


5 ஆம் நிலை வீரரான நிஷிகோரிக்கு (ஜப்பான்) தொடக்க சுற்றே கடும் போராட்டமாக இருந்தது. அவர் 6-3, 6-7, 6-2, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் கடுமையாகப் போராடி இத்தாலி வீரர் சிமியோனை வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் ரோனிக் (கனடா), 11 ஆம் நிலை வீரர் டிமிட்ரோவ் (பல்கேரியா) ஆகியோர் வென்று 2 ஆவது சுற்றுக்கு நுழைந்தனர்.

6 ஆம் நிலை வீராங்கனையான சபரோசா (செக்குடியரசு) முதல் சுற்றில் அமெரிக்காவைச் சேர்ந்த அலிசனை எதிர்கொண்டார். இதில் சபரோவா 3-6, 7-5, 6-3 என்ற கணக்கில் வென்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் 16 ஆம் நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6-0, 6-0 என்ற நேர் செட் கணக்கில் சகநாட்டைச் சேர்ந்த மேடின்சனை வீழ்த்தினார். முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), 4 ஆம் நிலை வீராங்கனையான மரியா ஷரபோவா (ரஷ்யா), ஸ்டெப் ஹென்ஸ் (அமெரிக்கா) ஆகியோர வென்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

# 200 மீற்றர் ஓட்டத்தில் ஐந்தாவது சிறந்த பெறுபேறு



200 மீற்றர் ஓட்ட வரலாற்றில் ஐந்தாவது விரைவான சிறந்த காலப் பெறுமதியை அமெரிக்காவின் ஜஸ்டின் கட்லிங் பதிவுசெய்துள்ளார்.

அமெரிக்க மெய்வல்லுநர் சாம்பியன்ஷிப்பின் 200 மீற்றர் ஓட்டத்தின் இறுதிப் போட்டியில் ஜஸ்டின் கட்லின் முதலிடத்தைப் பெற்றார். 33 வயதான கட்லின் போட்டித் தூரத்தை 19 தசம் 57 செக்கன்களில் நிறைவுசெய்தார்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 200 மீற்றர் ஓட்டத்தை 19 தசம் 68 செக்கன்களில் நிறைவுசெய்தமையே அவரின் சிறந்த காலப் பெறுதியாக இதுவரை இருந்துவந்தது.

2015 ஆம் ஆண்டில் ஆதிக்கம் செலுத்தியுள்ள தடகளவீரராகவுள்ள கட்லின், அண்மையில் 100 மீற்றர் ஓட்டத் தூரத்தை 9 தசம் 74 செக்கன்களில் நிறைவு செய்திருந்தார். 200 மீற்றர் ஓட்டத்தை 19 தசம் 19 செக்கன்களில் நிறைவுசெய்துள்ள ஜமேக்காவின் உசைய்ன் போல்ட் அதிவேகமான சிறந்த காலப் பெறுமதியை பதிவு செய்து சாதனை நிலைநாட்டியுள்ளார்.

மற்றுமொரு ஜமேக்கா வீரராக ஜொகான் பிளேக் 19 தசம் 26 செக்கன்களிலும் அமெரிக்காவின் மிச்சேல் ஜோன்சன் 19 தசம் 32 செக்கன்களிலும் அமெரிக்காவின் வெல்டர் டிக்ஸ் 19 தசம் 53 செக்கன்களிலும் 200 மீற்றர் ஓட்ட தூரத்தை நிறைவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞர்கழக விளையாட்டு

## வசந்தசிறி, சண்.இந்து சம்பியன்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடாத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி, சண்டிலிப்பாய் இந்து சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தன.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் அணிகளான வசந்தசிறி - சிறிபாரதி அணிகள் பலப்பரீட்சை நடாத்தின. இதில் வசந்தசிறி 25:18, 25:18 என்ற செற்றில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

வலைப்பந்தாட்டத்தில் பண்டத்தரிப்பு ஜசிந்தாவை எதிர்கொண்ட சண்டிலிப்பாய் இந்து 18:25 என்ற செற் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (93)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டம்

# வேம்படி மகளிர் - கொக்குவில் இந்து

# இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்திவரும் கூடைப்பந்தாட்டத் தொடரில் 17 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளில் வேம்படி மகளிர் கல்லூரியும் கொக்குவில் மகளிர் கல்லூரியும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரியும் - சுன்னாகம் இராமநாதன் கல்லூரியும் மோதின ஆரம்பம் முதலே விறுவிறுப்பிற்கு பஞ்சமில்லாமல் நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் மாறி, மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணமிருந்தன. இதனால் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா 39 புள்ளிகளைப் பெற்று சமநிலையில் இருந்தன. வெற்றியைத் தீர்மானிக்க மேலதிகமாக 5 நிமிட நேரம் வழங்கப்பட்டது. இதிலும் இரு அணிகளும் சிறப்பாகச் செயற்பட்டன. எனினும் அதிஷ்டம் வேம்படி பக்கம் சாய அவ்வணி 46:45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றொரு போட்டியில் கொக்குவில் இந்து - உரும்பிராய் மகளிர் கல்லூரி அணிகள் மோதின இப் போட்டியும் மிகவும் விறுவிறுப்பாகவே இடம்பெற்றது. எந்த அணி வெற்றி பெறுமென்ற நிலை தெரியாத வகையில் போட்டி இடம்பெற்றது. எனினும் கொக்குவில் இந்து 37:36 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. (93)

விளையாட்டுச் செய்திகள்

# கரப்பந்தில் சம்பியன்



(வலிகாமம்)

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இவ்வாண்டிற்கான கரப்பந்தாட்டப் போட்டிக்கான சம்பியனாகினர் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினர்.

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இவ்வாண்டிற்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

இடம்பெற்ற போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இளைஞர் கழகமும் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகமும் தகுதி பெற்றன.

ஆரம்பம் முதலே போட்டியை கட்டுக்குள் வைத்திருந்த சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக அணியினர் 25:14, 25:10 என்னும் 2:0 நேர் செட்களில் வென்று வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இவ்வாண்டிற்கான கரப்பந்தாட்டப் போட்டிக்கான சம்பியனாகினர். (48)

# தொடரும் சம்பியன் வேட்டை

(இளவாலை)

சேவாலங்கா நிறுவனம் மீள்குடியேற்ற கிராமங்களுக்கிடையில் நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும், மன்னார் பிரதேச செயலக அணியும், மோதிக்கொண்டன. தெல்லிப்பளை பிரதேச செயலக வீரர்களின் துடிப்பான செயற்பாட்டால் அவ்வணி 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை கரப்பந்து வலைப்பந்தாட்டப் போட்டிகளிலும் வென்று தெல்லிப்பளை பிரதேசசெயலக அணி.சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (93)

# திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் தரவரிசையில் முன்னிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்ரல் விளையாட்டுக்கழகத்தின் ஜோர்ஜ் வெப்ஸர் தரவரிசையில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 53.65 என்ற புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாடும் கழகங்களை வருடா வருடம் தரவரிசைப்படுத்தும் நடவடிக்கையை சென்ரல் விளையாட்டுக்கழகம் மேற்கொள்கின்றது.

50 ஓவர் போட்டியில் வெற்றியீட்டினால் 5 புள்ளிகள், 30 ஓவரில் வெற்றியீட்டினால் 3 புள்ளிகள், இருபது - 20 வெற்றியீட்டினால் 2 புள்ளிகள் இதற்கு வழங்கப்படுகின்றன.

இதனைவிட பெறப்படும் ஒவ்வொரு 10 ஓட்டங்களுக்கு 0.1 புள்ளிகளும், வீழ்த்தப்படும் ஒவ்வொரு விக்கெட்டுக்கும் 0.1 புள்ளிகளும் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் திருநெல்வேலி அணி, இந்தாண்டு இதுவரையில் பங்குபற்றிய 9 போட்டியில் 8 போட்டிகளில் வெற்றியீட்டி 53.65 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் 11 போட்டிகளில் பங்குபற்றி 7 போட்டிகளில் வெற்றிபெற்று 51.68 புள்ளிகளுடன் 2 ஆம் இடத்திலும், ஸ்ரீகாமாட்சி அணி 8 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றியீட்டி 37.68 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்திலும் உள்ளன.

37.13 புள்ளிகளுடன் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 4 ஆம் இடத்திலும், 36.76 புள்ளிகளுடன் ஹாட்லியைறீஸ் அணி ஐந்தாவது இடத்திலும் உள்ளன. (48)

# எல்லே போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான எல்லே போட்டிகள் இன்றையதினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 08.30 மணிக்கு நடைபெறும் இப்போட்டியில் பங்குபற்றும் பிரதேச செயலக அணியினரை உரிய நேரத்திற்கு முன்னர் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (93)

# கழுகுகள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற போட்டிகளின் வரிசையில், வடமராட்சி யூத் கிளப்பில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன.

இதில் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கொம்மந்தறை கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் விக்ரமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.


இந்த ஆட்டத்தில் கழுகுகள் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.







வல்வை மானாங்கனை திருமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது அதன் பதிவுகள்...



# அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில் இலங்கை அரசுக்கு சங்கடமளித்தது ஏன்?

கே.சஞ்சயன் கட்டுரையிலிருந்து.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தீவிரவாத முறியடிப்புக்கான பிரிவு கடந்த 19ஆம் திகதி வொஷிங்டனில் வெளியிட்ட அறிக்கை இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தீவிரவாதம் தொடர்பான இந்த அறிக்கை அமெரிக்காவினால் ஆண்டு தோறும் வெளியிடப்பட்டு வரும் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் வெளியிடப்படும் இந்த அறிக்கையில், உலகில் உள்ள நாடுகளில் தீவிரவாதம் தொடர்பான செயற்பாடுகள் குறித்தும் அமெரிக்காவினால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்தும் விபரிக்கப்படுவது வழக்கம்.

இம்முறை அறிக்கையில், அமெரிக்காவினால் வெளிநாட்டு தீவிரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்ட விடுதலைப் புலிகள் பற்றிய ஒரு சிறிய பந்தி சேர்க்கப்பட்டுள்ளது.

அதில் மலேசியாவில் 2014ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் பலர் இந்தியாவில் உள்ள அமெரிக்க, இஸ்ரேலிய இராஜதந்திர மையங்களை தாக்கத் திட்டமிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

அதை விட, கடந்த சில வருடங்களில் கூறப்பட்டது போன்றே 2014 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு ஆதரவு தொடர்ந்து செயற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் பற்றி அமெரிக்கா குறிப்பிட்ட பகுதிகளை வைத்து இலங்கையில் எதிர்க்கட்சிகள் பெரும் புயலை கிளப்பியிருக்கின்றன. இது அரசாங்கத்துக்கும் பெரும் சங்கடத்தையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கவுள்ள சூழலில் அமெரிக்கா சர்ச்சைக்குரிய விடயங்களை ஏன் சேர்த்துக்கொண்டது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

தீவிரவாதம் தொடர்பான அமெரிக்காவின் அறிக்கை இலங்கை அரசியலில் பெரும் புயலைக் கிளப்பி விட்டிருக்கிறது. எதிர்க்கட்சியினர், விடுதலைப் புலிகள் இன்னமும் உயிர்ப்புடன் இருப்பதாக அமெரிக்காவே அறிவித்துவிட்டது என்று பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிப்பதில் அமெரிக்கா பெரும்பங்கு வகித்ததாக பரவலான கருத்து உள்ளது. எனவே, மஹிந்த ராஜபக்ஷவின் மீள் அரசியல் வருகையைத் தடுப்பதற்கும் அமெரிக்கா கவனம் செலுத்தும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அமெரிக்கா வெளியிட்ட தீவிரவாதம் குறித்த அறிக்கையே மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் உயிர்ப்பிக்கப் போதுமான ஒன்றாக மாறியிருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு புலிகள் வரப் போகிறார்கள், அதனைத் தடுக்க தம்மை ஆட்சியில் அமர்த்துங்கள் என்று கோரி அரசியல் நடத்தும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இப்போது கொழும்பு அரசியலில் எங்கு பார்த்தாலும், அமெரிக்க அறிக்கையை மேற்கோள்காட்டி, புலிகள் வரப்போகிறார்கள் என்ற செய்தியே பரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. வடக்கிலிருந்து அரசாங்கம் இராணுவ முகாம்களை அகற்றி அவர்களின் மீள் எழுகைக்கு இடமளிக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இதனை அரசாங்கத்தினால் சமாளிக்க முடியாமல் திணறுவதையும் அவதானிக்க முடிகிறது.

எதற்காக அமெரிக்கா இவ்வாறு ஒரு அறிக்கையை வெளியிட்டது என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் உள்ளது. புதிய அரசாங்கத்தின் மீது அதிகம் நம்பிக்கை கொண்ட நாடாக அமெரிக்காவே இருந்து வரும் நிலையில், அமெரிக்காவின் அறிக்கையில் புதிய அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இது இலங்கை அரசியலில் குழப்பங்களை ஏற்படுத்தும் என்பதையும் விரைவில் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் அமெரிக்கா அறிந்தேயிருக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலில் இந்த விவகாரம் கூடுதல் தாக்குதல் செலுத்தினால், தற்போது அமெரிக்கா தலையில் வைத்துக்கொண்டாடும் மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு விடும் என்பதையும் அமெரிக்கா அறியும். இருந்தாலும், இந்த அறிக்கையை வெளியிட்டு புயலைக் கிளப்பி விட்டிருக்கிறது அமெரிக்கா. இது அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கவனக்குறைவு என்று இலகுவாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய அரசாங்கம் தோற்கடிக்கப்படுவதை அமெரிக்கா விரும்பாது என்ற கருத்தே இருந்து வந்த நிலையில், இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் அந்த நிலைப்பாட்டை சந்தேகிக்க வைக்கின்றன.

எவ்வாறாயினும், விடுதலைப் புலிகள் தொடர்பாக அமெரிக்கா தனது அறிக்கையில் முன்வைத்திருக்கின்ற தகவல்களின் விளைவுகளை அமெரிக்காவும் அனுபவிக்க நேரிடலாம். ஏனென்றால், இந்த விவகாரம் இப்போதைக்கு ஓயப்போவதில்லை.

# என் எழுத்து எனக்குப் பிடிக்கிறது!

பிரபல ஆங்கில நாவலாசியர் அமிட்டவ் கோஷின் சமீபத்திய நாவல் Flood of Fire. அமிட்டவ் கோஷ் சுமார் பத்து ஆண்டுகள் இதற்காக ஆராய்ச்சி மேற்கொண்டாராம். அந்த உழைப்புத்தான் இத்தனை பெரிய நாவலாக உருவாகியிருக்கிறது ஏராளமான சரித்திரத் தகவல்கள், ஆதாரங்கள். நீங்கள் எழுத்தாளரா இல்லை சரித்திர ஆராய்ச்சியாளரா என்று கேட்கும் அளவுக்கு அத்தனை சரித்திர ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்.




சுருக்கமாக, இதுதான் நாவலின் கரு: வருடம் 1839. சீனாவுக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே பயங்கரப் புகைச்சல். ஓபியம் எனப்படும் அபினைக் கப்பலில் கொண்டு வந்து சீனாவில் விற்பதில் தொடங்கிய முதலாவது போர் என்றே சொல்லலாம்.

இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அபினைப் பயிரிட்டு அதைக் கொண்டுபோய் விற்கும் பணியில் பிரிட்டிஷாருக்கு உதவியாக பீஹார் படையினருடன், தமிழ்ப் படையினரும் இருந்தார்கள். "மொத்தம் நாலாயிரம் பேர் என்றால் அதில் இரண்டாயிரம் பேர் தமிழ்ப் படையினர்.

அந்தக் கப்பலில் பலவகைப்பட்டவர்கள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நினைப்பு. அதில் ஒருவர் கேசரி சிங். கிழக்கிந்திய கம்பெனியில் இந்திய சிப்பாய்களுக்குத் தலைமை தாங்கிச் செல்பவர். ஸக்காரி ரீட் என்ற ஒரு பயணியும் கப்பலில் பயணம் செய்கிறார். இன்னொரு குறிப்பிடத்தக்க பாத்திரம் ஷிரின் மோடி. சீனாவை நோக்கிப் போய், அபின் வியாபாரம் செய்த தன் கணவனின் செல்வத்தையும், செல்வாக்கையும் தேட முனைபவள். சீனா இந்த அபின் வணிகப் போரில் பயங்கரமாகத் தோற்றுப் போய்விடுகிறது. பிரிட்டிஷார் கையில் ஹொங்கொங் வந்துவிடுகிறது. பேராசை மிகுந்த வணிகர்கள், சீனாவில் அபின் விற்கப் போய், சீனர்களை அப்படியே தூக்கிச் சாப்பிட்டு விடுகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சரித்திரப் பின்னணியை அமிட்டவ் கண் முன்னே நிறுத்தியிருப்பதுதான் நாவலின் வெற்றிக்குக் காரணம்.

நாவலாசிரியர் அமிட்டவ் கோஷ் கொல்கத்தாவில் பிறந்தவர். இந்தியா, பங்களா தேஷ் மற்றும் இலங்கையில் வளர்ந்தவர். டெல்லியிலும், ஒக்ஸ்போர்டிலும், அலெக்சான்ட்ரியாவிலும் படித்தவர். இவர் எழுதிய முதல் நாவல், The Circle of Reason. பிரான்ஸ் நாட்டுப் பரிசு பெற்றது. The Shadow Lines இந்தியாவின் சாகித்ய அகடமி மற்றும் ஆனந்த புரஸ்கார் இரண்டையுமே பெற்றது. The Calcutta Chromosome, ஆர்தர் ஸி. கிளார்க் பரிசு பெற்றது. The Hungry Tide குரொஸ்வேர்ட் புத்தகப் பரிசு பெற்றது.

Sea of Poppies, River of Smoke, Flood of Fire மூன்றும், ஒரே கருவை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட தொடர் நாவல்கள். இவரது நூல்கள் இருபது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. நியூயோர்க்கர், நியூ ரிபப்ளிக், நியூயோர்க் டைம்ஸ் ஆகிய இதழ்களில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருகிறார்.

டெல்லி பல்கலைக்கழகம், கொலம்பியா பல்கலைக்கழகம், குயீன்ஸ் கல்லூரி, ஹார்வர்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். 2010 இல், நியூயோர்க் குயீன்ஸ் கல்லூரி இவருக்கு டாக்டர் பட்டம் அளித்து கௌரவித்தது.


சேதன் பகத்தும், அமிஷ் திவாரியும் எழுதுவதும் எனக்குப் பிடித்திருக்கிறது. சுவாரசியமாக எழுதுகிறார்கள். ஆனால் நான் எழுதுவது எனக்குப் பிடித்திருக்கிறது. அதனால்தான் நான் எழுதுகிறேன். நான் எழுதுவது எல்லாமே எனக்குப் பிடித்தமானவைதாம். இது எனக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் தருகிறது" என்று சமீபத்தில் ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார் அமிட்டவ் கோஷ்.

# தந்தை அழகி!

அமெரிக்காவைச் சேர்ந்தவர் பிரபல, தொலைக்காட்சி நடிகையும், மொடல் அழகியுமான கிம் கர்தாஷியன். இவரது அம்மாவின் இரண்டாவது கணவர், ப்ரூஸ் ஜென்னர், வயது, 65. சமீபத்தில் இவர், அறுவைச் சிகிச்சையின் மூலம் பெண்ணாக மாறி, தன் பெயரை, காத்லின் ஜென்னர் என மாற்றிக் கொண்டதாக, செய்திகள் வெளியானது. ஆனால், அவரின் புகைப்படங்கள் வெளியாகவில்லை.

இந்நிலையில், சமீபத்தில் ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் அட்டையில், ப்ரூஸ் ஜென்னர் என்ற காத்லின் ஜென்னரின் படு கவர்ச்சியான புகைப்படம் வெளியாகி, அமெரிக்கா முழுவதும் பரபரப்பையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவர், முன்னாள் தடகள வீரர். சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று, பல பதக்கங்களை குவித்துள்ளார்.



## காலமும் கருத்தும்



# வழிகாட்டத் தவறிய சமூகம்

**சி**லநேரங்களில் எமக்குத் தெரியும் சில விடயங்கள் சில மாதிரித் தெரிகின்றன. அதாவது என்ன சொல்ல வருகிறேன் என்றால் பார்வைகள் தான் காட்சியின் கோணத்தை தீர்மானிக்கின்றன.

இதற்குச் சுவாமி யொருவர் சொன்ன கதை நினைவுக்கு வருகிறது. வீதியோரத்திலே ஞானியொருவர் தவம் செய்து கொண்டிருந்தார். அந்தவழியே வந்த குடிகாரன் அவரைப் பார்த்து, “மனைவியுடன் சண்டைபோட்டு வந்து வீதியிலே தூங்குகிறான் பார்” என்று புலம்பிக்கொண்டே சென்றுவிட்டான்.

இரண்டாவதாக வந்தவன் “திருடன்” அவன் அவரைப் பார்த்துச் சொன்னான். “எங்கோ வீட்டில் திருடப்போயிருக்கிறான் எதுவும் கிடைக்கவில்லை அதுதான் தெருவில் தூங்கிவிட்டான்” என்று சொல்லிவிட்டு அப்பால் நகர்கிறான்.

மூன்றாவதாக வந்தவரோ சாமியார். “ஞானி நீண்ட நாள் தவத்தில் இருக்கிறார் களைத்துப் போயிருக்கிறார்” என்று அவர் அருகில் இருந்து ஞானி விழித்தவுடன் அவருக்கு உணவு முதலான சிரம பரிகாரம் அளித்துவிட்டு அந்த சாமியார் அங்கிருந்து சென்றார்.

இது சிந்தனைக்காக சொல்லப்பட்ட ஒரு கதையாகும். சமூகத்தில் இருப்பவர்களில் பெரும்பாலானோர் (ஒருசிலரைத் தவிர) குடிகாரராகவும், திருடன் போன்றும் சிந்திக்கின்றார்கள். போதைப்பெருள் அதிகரிப்பு என்றாலும் சரி கலாச்சார சீரழிவு என்றாலும் சரி அதனை நாம் பார்க்கும் கோணத்திலே தான் இருக்கிறது.

போதைப்பொருள் விற்றால் அதனை நாம் வாங்கிப் பாவிக்கவேண்டுமா? வெகுஜன ஊடக கலாச்சாரங்கள் ஊடாக சீரழிவு உள்நுழைந்தாலும் நாம் அதற்கு எடுபடவேண்டுமா? என்று சிந்திக்க வேண்டியதாய் இருக்கிறது.

இதற்கொல்லாம் காரணம் அறிவுப்பஞ்சத்தின் நீட்சி என்றே சொல்ல வேண்டியதாய் இருக்கிறது. பகுத்தறிவு வாய்ந்த சிந்தனை இன்று வீழ்ச்சி கண்டுள்ளது.

இன்று இளைஞர்கள் முகப்புத்தகத்திலும், வாட்ஸ்அப்பிலும் மூழ்கிவிட்டதோடு, சமூகத்தின் முக்கியமானவர்கள் என்று சொல்லப்படும் அரசியல்வாதிகள் புத்திஜீவிகள் பெரியவர்கள் சமூகநலவாதிகள் என்போர் இளைஞர்களை சிறப்பாக வளர்க்கத் தவறிவிட்டார்கள் என்பதே உண்மை.

**- அன்புவழியூர் ச.திருச்செந்தூரன்**

---

**வா**ழும் கலையின் ரகசியத்தை ஒரே வாக்கியத்தில் கூற வேண்டுமானால் அது ‘நிகழ்காலத்தில் இருத்தல்’. ‘நிகழ்காலத்தில் இருத்தல்’ என்பது கேட்பதற்கும் படிப்பதற்கும் சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் அதை நடைமுறையில் கடைப்பிடிப்பதென்பது சுலபமான காரியமல்ல.

பெரும்பாலும் எல்லோரும் கடந்த காலத்தில்தான் இருக்கிறார்கள். சிலர் எதிர்காலத்தில் இருப்பர். நிகழ்காலத்தில் - இந்தக் காலத்தில் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மிகக் குறைவு.

கடந்த காலத்தில் இருப்பவர்கள் என்போர் அப்போது பட்ட காயங்களை நினைத்து இப்போதும் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பார்கள் அல்லது கடந்த காலப் பெருமைகளை நினைத்துக் கொண்டு இப்போதும் மயக்கத்தில் இருப்பர்.





என்றைக்கோ பெற்ற தோல்வியை - சந்தித்த அவமானத்தை இன்றைக்கும் நினைத்து வருந்திக் கொண்டிருப்பதில் என்ன பயன்?

# வாழ்தல் ஒரு கலை!

பழைய சோகச் சுவடுகள் நெஞ்சில் இருக்கும் வரை நீங்கள் செயற்திறன் குறைந்தவராகவே இருப்பீர்கள். அதனால் உங்கள் வாழ்வில் உயிர்ப்பு இல்லாமல் போய்விடும். நடைபிணம் என்று கூறத்தக்கவர்கள் வேறு யாருமல்லர், கடந்த கால சோகச் சுமைகளை தூக்கித் திரிபவர்கள்தாம்.

உள்ளத்தில் உண்டான எந்தக் காயத்தையும் காலம் தன் கரங்களால் மருந்திட்டு ஆற்றி விடும். எந்தத் துன்பச் சுவடும் காலம் செல்லச் செல்ல மறைந்து கொண்டே போகும். இதுதான் இயல்பு. ஆனால் 'கடந்த கால‘ மனிதர்கள் காலத்தினால் தழும்பாகிவிட்ட மனப் புண்ணையும் மீண்டும் மீண்டும் குத்திக் கிளறி அதைப் பச்சைப் புண்ணாக்கிக் கொண்டு பரிதவிப்பர். குரங்குகளுக்கே இந்தக் குணம் அதிகம். மனம் ஒரு குரங்குதானே!

நிகழ்காலத்தில் கிடைத்துக் கொண்டிருக்கும் மணிமகுடங்களைக் குறித்து அவர்கள் மகிழ மாட்டார்கள் கடந்த காலத்தில் கிடைத்த முள்கிரீடங்களை நினைத்தே முனகிக் கொண்டிருப்பார்கள்.

நிகழ்கால ஊஞ்சலை நிராகரித்துவிட்டுக் கடந்த காலச் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இவர்கள் இதயத்தில் ஒருபோதும் ஆனந்த ஒளிக்கீற்று ஊடுருவ முடியாது.

கடந்த காலப் பெருமைகளை, பெற்ற சுக அனுபவங்களைப் பேசிக் கொண்டு நிகழ்காலத்தை நிராகரிக்கும் இன்னொரு வகை மனிதர்கள், சென்ற காலம் மீண்டும் திரும்பாதா? என்று ஏங்கிக் கிடப்பார்கள் இவர்கள். காலம் திரும்பாது; இவர்கள்தான் திருந்த வேண்டும்!

**(‘வாழ்தல் ஒரு கலை’ நூலில் சுகி.சிவம்)**

---

# அஷ்டமாசித்தி

**3**

**ஜப்பானிய பழங்கதை**
**(யாஸோ - கிதான் என்ற புராதன ஜப்பானிய கிரந்தத்திலிருந்து எடுக்கப்பட்டது.)**
**தமிழில் : புதுமைப்பித்தன்**

**(நேற்றைய தொடர்ச்சி)**

**ஆ**ரகாவனுக்கு பூயிச்சி என்று ஒரு தம்பியுண்டு. அண்ணனுக்கு அடியும் சிறையும் கிடைத்தது கண்டு மிக்க கோபம் கொண்டான். அந்தக் கொதிப்பிலே குவான்ஷின் கோஜியைக் கொன்றுவிடத் தீர்மானித்தான். கிழவன் விடுதலை கிடைத்ததும் நேராக மதுக் கடைக்குச் சென்றான். அவனைத் தொடர்ந்து கடைக்குள் சென்ற பூயிச்சி, அவனைக் கீழே தள்ளி தலையை வெட்டினான்.



கிழவனுக்குக் கிடைத்த நூறு பொற்காசுகளையும் எடுத்துக் கொண்டான். தலையையும் தொகையையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு அண்ணனிடம் சென்று அவன் காலடியில் வைத்தான். மூட்டையை அவிழ்த்து விவரித்தான். உள்ளே மதுக் குடுக்கையும் மலமும்தான் இருந்தது! கடையில் கிடந்த தலையில்லா முண்டமும் மறைந்து போயிற்று என்பதையும் கேட்டு இன்னும் அதிகமாக திக்பிரமை பிடித்துப் போனார்கள் சகோதரர்கள் இருவரும்.

பிறகு ஒரு மாத காலம் வரை குவான்ஷின் கோஜியைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. ஒரு மாதம் கழித்து ஒரு நாள் நோபு நாகன் மாளிகை வாசலில் குவான்ஷின் கோஜியைப் போன்ற ஒருவன் குறட்டை விட்டுத். தூங்கிக் கொண்டிருந்தான் குறட்டை, இடியின் கர்ஜனை போல் இருந்தது. மது மயக்கத்தில் கிடப்பவன் அவன் தான் என்று காவலன் ஒருவன் கண்டான். தூக்கிப் போய் சிறையில் போட்டு அடைத்தான். அங்கும் கிழவன் விழிக்கவில்லை. பத்து நாட்கள் இரவு பகல் ஓயாமல் தூங்கினான். அவனது குறட்டை தூரத்துப் போர் முரசு போல் ஒலித்துக்கொண்டிருந்தது.

இச்சமயத்தில் தான் நோபு நாகன் தன்னுடைய படைத் தலைவர்களுள் ஒருவனான அக்கெச்சி மிட்ஸு ஹீடே என்பவனுடைய சதிக்கு இலக்காகி மாண்டான். மிட்ஸு ஹீடே ஆதிக்கம் பனிரெண்டு நாட்கள் தான் நிலைத்தது.

மிட்ஸு ஹீடே, கியாட்டோ வுக்கு மன்னனானவுடன், குவான்ஷின் கோஜியின் வழக்கை, அவனிடம் அறிவித்தார்கள். கைதியைத் தன் முன்னால் அழைத்து வரும்படி உத்தரவிட்டான் மிட்ஸு ஹீடே. கிழவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். மிட்ஸு ஹீடே அவனைப் பரிவுடன் நடத்தினான். அவனுக்கு திருப்தியாக நல்ல நல்ல உணவு பரிமாறும்படி உத்தரவிட்டான். குவான்ஷின் கோஜி சாப்பிட்ட பிற்பாடு, தங்களுக்கு மதுவில் அத்தியந்த ப்ரீதி என்று சொல்லுகிறார்கள் ஒரே தடவையில் நீங்கள் எவ்வளவுதான் சாப்பிடுவீர்கள்?” என்று கேட்டான் புதுமன்னன்.

“எவ்வளவு குடிப்பேன் என்று தெரியாது. மதி மயங்கும் சமயத்தில் நிறுத்தி விடுவேன்” என்றான் கிழவன்.

மதுக்குடத்தை குவான்ஷின் கோஜி முன் கொண்டு வந்து வைக்கும்படி கட்டளையிட்டான் அரசன். கிழவனுடைய கலசம் வற்ற வற்ற ஊற்ற வேண்டும் என்று கட்டளையிட்டான்.

கிழவன் சிரமமாகப் பத்துக் குடங்களைக் காலி செய்து விட்டான். “இன்னும் இருக்கிறதா?” என்று கேட்டான். பணியாள் மதுக்குடங்கள் யாவும் காலி என்று சொல்ல, கூடியிருந்தவர்கள் பிரமித்துப் போனார்கள்.

“இன்னும் உங்களுக்கு திருப்தி வரவில்லையா?” என்று கேட்டான் அரசன்.

“அரசே ஒருவாறு திருப்திதான்; உனது கருணைக்குப் பதிலாக எனக்குத் தெரிந்த சில வேடிக்கைகளைக் காண்பிக்கிறேன்” என்றான் குவான்ஷின் கோஜி.

“அரசே அந்தத் திரையில் தெரியும் படத்தைச் சற்று கவனியுங்கள்” என்றான் குவான்ஷின் கோஜி.

ஓமித்தடாகத்தின் எட்டு அழகுகளைக் காட்டும் சித்திரம் அது. அங்குள்ளவர்கள் யாவரும் படத்தையே பார்த்தார்கள். படத்திலே ஒரு மனிதன் ஒரு படகை ஓட்டிச் செல்லுவது போல வரைந்திருந்தான் சித்திரக்காரன். படத்திலே படகு ஒரு அங்குல நீளந்தானிருந்தது, குவான்ஷின் கோஜி படகை நோக்கிக் கையை நீட்டி அழைத்தான். படகு படத்தில் திரும்பியது. முன்னோக்கி வர ஆரம்பித்தது. நெருங்க நெருங்க படகு பெரிதாயிற்று.

சிறிது நேரத்தில் படகோட்டியின் முக ஜாடையும் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. படகும் ரொம்ப அருகில் நெருங்கி விட்டது. திடீரென்று படத்திலிருந்த ஏரித் தண்ணீர் படத்தை விட்டு வழிந்து அறைக்குள் பெருக ஆரம்பித்தது. அறையில் கூடியிருந்தவர்கள் உடைகள் நனைந்து போகாமல் வரிந்து தூக்கிக் கொண்டனர். ஜலம் முழங்கால் அளவு வந்தது. மேலும் பெருக ஆரம்பித்தது. அதே சமயத்தில் படகும் திரையை விட்டு வெளி வந்தது. நிஜமான செம்படவன் படகு, அதன் துடுப்பு வலிப்பதும் கேட்டது. தண்ணீர் மேலே மேலும் பெருக ஆரம்பித்தது. அங்கு நின்றிருந்தவர்கள் இடுப்பளவு நனைந்தனர்.

படகு குவான்ஷின் கோஜியிடம் வந்தது. குவான்ஷின் கோஜி அதில் ஏறிக்கொண்டான். படகுக்காரன் படகைத் திருப்பி வெகு வேகமாக ஓட்டிச் சென்றான். படகு செல்லச் செல்ல ஜலமும் வடிய ஆரம்பித்தது. படகும் ஜலமும் படத்துக்குள்ளாகவே வடிந்து மறைய ஆரம்பித்தன.

படகு படத்தின் முன்பக்கமிருந்து செல்ல ஆரம்பித்ததும் அறையில் ஒரு சொட்டு ஜலம் கூட இல்லை. முன் போல காய்ந்து ஈரக் கசிவு கூட இல்லாமல் போய்விட்டது. ஆனால் படத்துக்குள் சென்ற படகும் வேகமாகச் சென்று கொண்டே இருந்தது.

அது தூரத்தில் செல்லச் செல்ல, சிறிதாகி வெறும் புள்ளி போலாயிற்று. பிறகு அந்தப் புள்ளியும் மறைந்தது. குவான்ஷின் கோஜியும் அதோடு மறைந்து போனான். அதன் பிறகு அவன் ஜப்பானில் தென்படவே இல்லை.

**(முற்றும்)**


# விசாரணைகளை மேற்கொள்ளாமல்
# வவுனியா அரச அதிபரை இடமாற்ற முடியாது
## உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவிப்பு

விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளாமல் வவுனியா அரச அதிபரை உடனடியாக இடமாற்றம் செய்ய முடியாதென உள்நாட்டலுவல்கள் அமைச்சு, வட மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானத்திற்கு தெரியப்படுத்தியுள்ளது.

வவுனியா அரச அதிபரை இடமாற்றம் செய்யக் கோரி கடந்த வியாழக்கிழமை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் அனுப்பியதுடன் உள்நாட்டலுவல்கள் அமைச்சருடன் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த விடயம் குறித்துப் பேசிய போதே அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார். விசாரணைகள் எதுவும் செய்யாமல் அவரை உடனடியாக இடமாற்றம் செய்யமுடியாதென்றும் இரண்டு பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்து விசாரணைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தன்னிடம் தெரிவித்தார் என்றும் சீ.வீ.கே. சிவஞானம் மேலும் தெரிவித்தார. இதேவேளை,

இந்த விடயம் குறித்து தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோரிடமும் தாம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடாத்தி கடிதம் ஒன்றை அவரிடம் கையளித்தனர் என்றும் வவுனியா அரச அதிபர் இடமாற்றம் தொடர்பில் தான் உரிய நடவடிக்கை எடுப்பார் என்றும் பிரதமர் கூறினார். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என அவைத் தலைவர் சீவீ.கே. சிவ ஞானம் தெரிவித்தார். மாகாண சபை உறுப்பினரை அவமதித்தார் எனத் தெரிவித்து ,வவுனியா அரச அதிபரை உடன் இடமாற்றுமாறு கோரி வடமாகாணசபை உறுப்பினர்கள் கடந்த செவ்வாயுககிழமை மாகாண சபை செயறபாடுகளை முடக்கி போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (25)

# பேரீச்சம்பழங்கள் வழங்கல்



நோன்பு காலத்திற்கென வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்கள் கிடைக்கப்பெற்றதை அடுத்து யாழ்.முஸ்லிம்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

கடந்த . மாதங்களில் யாழ்.முஸ்லிம்களிற்கு வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்கள் முறையாகக் கிடைக்கவில்லை என்ற செய்தி பரவலாக ஊடகங்களில் வெளியாகியிருந்தன.இதனடிப்படையில் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் ஏ.சி முபீன நடவடிக்கை மேற்கொண்டதுடன் . முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் முஹம்மதியா பள்ளி வாசலில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 136 பேருக்கு பேரீச்சம்பழங்கள் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டன.

இதனை யாழ் கிளிநொச்சி முஸ்லீம் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர். கே.எம் நிலாம் மற்றும் செயலாளர் எஸ்.கே.சுவர்கஹான் ஆகியோர் முன்னின்று வழங்கி வைத்தனர்.

# கலைபாடும் அருள் ஓசை
# இறுவட்டு வெளியீடு



பொலிகை கலை இலக்கிய மன்றத்தின் அனுசரணையில் விக்னேஷ் மற்றும் குமரன் இவர்களின் வரிகளில் உருவான பாடல்களுக்கு இசை ஊட்டி வடித்துள்ளார் ஈழத்து இளம் இசையமைப் பாளர் வெற்றி சிந்துயன் இவர்களின் கைவண்ணத்தில் உருவான கலைபாடும் அருள் ஓசை இறுவட்டு பொலிகண்டி கந்தவனக் கடவை முருகப் பெருமான் ஆலய மணி மண்டபத்தில் கடந்த 14 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

# கணனிகள் மட்டுமுள்ள கட்டடத்தை
# திறந்துவைத்த வடக்கு கல்வியமைச்சர்
## ஆசிரியர்கள்,மாணவர்கள் கவலை

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் மற்றும் கோணாவில் பாடசாலையில் மகிந்தோதய ஆய்வு கூடங்கள் வட மாகாண கல்வி அமைச்சரால் திறந்து வைககப்பட்டன.

முன்னைய அரசின் மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மகிந்தோதய ஆய்வு கூடங்கள் பத்து கிளிநொச்சி கல்வி வலயத்தில் அமைக்கப்பட்டு கடந்த காலத்தில் அனைத்து வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டு மாணவா களின் கல்விச் செயற்பாடுகளுககாக கையளிக்கப்பட்டு வந்தது.

இந்த மகிந்தோதய ஆய்வு கூடங்களில் 65 கணனிகள், விஞ்ஞான பாட ஆய்வுகளுக்கான உபகரணங்கள், அதற்குரிய் இரசாயன பதார்த்தங்கள், கணித பாட உபகரணங்கள் உள்ளிட்ட பல உபகரணங்களுடன ஒரு முழுமையான ஆய்வு கூடமாக மகிந்தோதய ஆய்வு கூடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

ஆனால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட மேற்படி இரண்டு ஆய்வு கூடங் களிலும் கணனிகளை தவிர வேறு எதுவும் இல்லை என மாணவர்களும் ஆசிரியர்களும் கவலை தெரிவித்துள்ளனர். ஆய்வு கூட கட்டடம் மட்டுமே திறந்து வைக்கப பட்டுள்ளதே தவிர அதனைப் பயன் படுத்த முடியாதுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் இங்கு உரையாற்றிய கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேள் இந்த மகிந்தோதய தொழில நுட்ப ஆய்வு கூடங்கள் இந்தப் பிரதேச மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் அதேவேளை இங்கு விஞ்ஞான மற்றும் கணித பாட உபகரணங்கள் அதற்குரிய இரசாயன பதாாத்தங்கள் இதுவரைக்கும் கிடைககவில்லை எனவே கிடைக்கும் வரைக்கும் ஆசிரியர்களும், மாண வர்களும் இருக்கின்ற வளங்களைக் கொண்டு கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# தமிழகத்திற்கு இடம்பெயர்ந்த
# இலங்கையருக்கு பிரஜாவுரிமை

இந்தியாவில் பிறந்த இலங்கையர்களுக்கான பிரஜாவுரிமை பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையொன்று இலங்கை சட்ட உதவி ஆணைக குழுவினால், கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்த மற்றும் இந்தியாவில் பிறந்த இலங்கையர்களுக்கான பிரஜாவுரிமையைப் பெற்றுக கொடுக்கும் இந்த நடவடிக்கையானது கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை கடவுச்சீட்டு காரியாலயத்தின் அதிகாரிகள், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவினர் இணைந்து சேவைகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 60இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான நடவடிக்கையொன்றை மீண்டுமொரு நாள் முன்னெடுத்து இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய இலங்கையர்களுக்கான பிரஜாவுரிமைகளைப் பெற்றுககொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் இது தொடர்பான விவரங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு மேற்குறித்த ஐந்து மாவட்டங்களிலும் உள்ள நீதி மன்ற வளாகங்களிலும் இயங்கி வரும் இலங்கை சட்ட உதவி ஆணைககுழுவின் அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் இலங்கை சட்ட உதவி ஆணைக குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# நூல் அறிமுக விழா

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1 நூலின் அறிமுக விழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மகாஜன சபையின் தலைவரும் ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியருமாகிய வை.சுப்பிரமயம் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்வில் அறிமுக உரையை யாழ்.பல்கலைக கழக மருத்துவ பீடத்தின் உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ் வரா நிகழ்த்த உள்ளார்.

நூல் நயப்புரைகளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வ.வசந்தகுமார், சுழிபுரம் ஆறுமுக வித்தியாலய ஆசிரியர் கை.சரவணன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்த உள்ளார்.

இந்த நிகழ்வில் கலைஞர்கள் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்ற உள்ளனர். (90)

# முரசின் இன்றைய பலன்

(01.07.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் ஆனி மாதம் 16 ஆம் திகதி.
சதுர்த்தசி திதி / மரணயோகம்.
மூல நட்சத்திரம் பின்னிரவு 04.30 வரை. பின் பூராடம்.
இராகு காலம 11.56 - 01.26 வரை. சுபநேரம 04.26 - 05.56 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
சட்டவிரோத மின் பாவனையால் தண்டம் பெறல்.

**ரிஷபம்**
பெற்றோரின் புத்திமதிகளைச் செவிமடுத்ததினால் ஆபத்தினின்றும் தப்பிவிடல்.

**மிதுனம்**
மருத்தீடு போட்டு பலவீனம் அடையச் செய்யலாமென்று அச்சத்தில் உறைந்துவிடல்.

**கடகம்**
சொத்துப்பங்கீடு சமரச நிலைக்கு கொண்டுவந்ததை ஏற்றுக் கொள்ளல்.

**சிம்மம்**
எரிபொருள் தீர்ந்துவிட்டதால்வாகனத்தை நீண்ட தூரம் உருட்டிச் சென்று தேகநலம்பாதிப்படைதல்.

**மீனம்**
காரியம் முடிந்ததும் கைவிட்டுச் சென்ற நண்பரை எண்ணிக் கவலை கொள்ளல்.

**கன்னி**
முறைதவறிய காதல் விவகாரத்தினால் குடும்பத்தில் பிரளயம் தோன்றுதல்.

**கும்பம்**
உங்கள் பதவிக்கு கண் வைத்து கேடு சூழமுயலும் சக ஊழியரில் எச்சரிக்கையாக இருத்தல்.

**மகரம்**
சரியாகத்திட்டமிடலை மேற்கொண்டதினால் பணிதேக்கமின்றி முடிவடைதல்.

**தனுசு**
முரண்பாடு தக்க வைத்த வேளை பொறுமையைக் காத்ததினால் சமரச நிலை எற்படல்.

**விருச்சிகம்**
கௌரவக்குறைவினால் அழைக்கப்பட்ட நிகழ்விற்கு சமுகமளிக்காது விடல்.

**துலாம்**
வயோதிபத்திலும் வாலிபனாக மிளிர பயிற்சிகளை மேற் கொண்டுவரல்.

# போதைக்கு பயன்படும் வலி நிவாரணி மாத்திரை

## வைத்திய நிபுணர் முரளி கவலை



(யாழ்ப்பாணம்)

வலி நிவாரணி மருந்துகளை சிலர் போதைக்காக பயன்படுத்துவதனால் வலி நிவாரணி மருந்துகளை கட்டுப்பாட்டுடன் வழங்க வேண்டிய நிலையில் உள்ளோம என யாழ்.போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களில் இளவயதினரே பெரும்பாலானவர்களாக உள்ளனர். போதைப்பொருள் பாவனையால் மூளையின் நரம்புகளில் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்புகள் கூட ஏற்படும் அபாயம் உள்ளது என்று அவர் கூறினார்.

சிலர் போதைக்காக சில மருந்துகளை அதிகமாகப் பாவிகின்றனர். சில மருந்துகளை, பாவிக்க வேண்டிய அளவுக்கு அதிகமாகப் பாவிக்கும் போது, அதனால் போதை ஏற்படும். அந்த மருந்து வகைகளை இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதால் அதனைப் பாவிக்கின்றனர். இதனால் அவர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டு அவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் போன்று காட்சியளிப்பார்கள்.

அதற்கு அடிமை யானவர்கள் அம்மருந்துகள் பாவிப்பதை திடீரென்று நிறுத்த முடியாது.

அவ்வாறு நிறுத்தினால் அவர்களுக்கு வேறு பாதிப்புக்கள் ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர்களை தீவிர கண்காணிப்பில் வைத்திருந்து, சிறிது சிறிதாக அவர்களை மருந்துகளை பாவிப்பதிலிருந்து மீட்க முடியும்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து அனைவரையும் மீட்டெடுக்க வேண்டுமாயின், சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து போதைப்பொருளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

சிவத்தமிழ்ச் செல்வியின்

# குருபூசை தின நிகழ்வில் சிவாச்சாரியார்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசை நிகழ்வு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் நடைபெற்ற போது ஈழத்தில் வாழும் வயதில் மூத்த சிவாச்சாரியார்களாகிய இணுவில் காயத்திரி பீடத்தினுடைய முதல்வரும் தர்மசாஸ்தா குருகுல அதிபருமாகிய சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மூத்த குருக்கள் சிவஸ்ரீ சு.நடராஜக் குருக்கள் ஆகியோருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இக் குருபூசை வைபவத்தில் இசை ஆசிரியர் யசோதா சிறிகுமரனின் பண்ணிசை அரங்கம், துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதம குரு சிவசிறி வா.அகிலேஸ்வரக் குருக்கள் சுந்தர ஆஞ்சநேயர் ஆலயப் பிரதம குரு சிவசிறி இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோரது ஆசியுரைகளும் இடம்பெற்றன.

மூத்த சிவாச்சாரியார்களது கௌரவிப்பைத் தொடர்ந்து துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் பன்னிரு திருமுறை வெளியீட்டின் ஓரங்கமாகப் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்கும் திருத்தொண்டர் புராணத்தின் முதற்பாகம் வெளியீடு இடம்பெற்றது. இதன் வெளியீட்டுரையை அருள்மொழியரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் வழங்கினார்.

# இணுவில் மத்திய கல்லூரியில் புதிய கலையரங்கம் திறப்பு

(இணுவில்)


இணுவில் மத்திய கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சைவ மகாஜன மண்டப கலையரங்கத் திறப்பு விழாவும் சைவ மகாஜனன் தீபம் மலர் வெளியீடும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்ற மீள்கட்டுமான இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் பொறியியலாளர் தெ.சுரேஸ் முன்னாள் அதிபர் செ.சோதிப்பெருமாள் லண்டன் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த ந.சச்சிதானந்தன் பாடசாலை வேலை பரிசோதகர் ந.ஜெயசீலனும் கலந்துகொண்டார்கள்.

விருந்தினர்கள் கல்லூரி முன்பாக உள்ள சிவன் ஆலயத்தில் இருந்து கல்லூரி கீழைத்தேய வாத்தியக் குழுவினரின் அணிவகுப்புடன் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றல் தேசியக் கொடி மற்றும் கல்லூரிக் கொடிகள் ஏற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து மகாஜன மண்டபத்தை பிரதம விருந்தினர் திறந்து வைத்ததுடன் மகாஜனன் தீபம் மலரையும் வெளியிட்டு வைக்க முதற்பிரதிகளை முன்னாள் அதிபர் சோதிப்பெருமாள், செ.இலகுநாதன் உட்பட மற்றும் பலர் பெற்றுக் கொண்டார்கள்.

# ஆயுர் வேதம்

## பித்தப்பை கற்கள் கரைய...!




மனிதர்களுக்கு வயது ஏற ஏற வயிற்றினுடைய தசைப்பகுதியில் கொழுப்பு சேர்வதும், உள்ளுறுப்புகளில் கொழுப்பு அடைபடுவதும் இயற்கையே.

ஆனால் சரியான உணவுச் சேர்க்கையின் வாயிலாகவும், சற்று சுறுசுறுப்பான வாழ்க்கைமுறையை அமைத்துக் கொள்வதாலும், உடலில் கொழுப்புச் சேர்வதைத் தவிர்த்து நம்மால் ஓர் ஆரோக்கியமான உடற்கட்டினைப் பெறமுடியும்.

லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரி சுமார் ஐம்பதாயிரம் மனிதர்களுடைய உணவுமுறையை ஆராய்ந்து அவர்களுடைய இடுப்புப் பகுதியில் கொழுப்பு சேரும் இடத்தை சுமார் ஐந்து வருடங்கள் ஆராய்ச்சி செய்தனர். அதில் அதிகமான அளவில் பழம், பால்பொருட்களை உண்டவர்களுக்குத் தொப்பை விழுதல் மிகவும் குறைந்த நிலையிலும், ரொட்டி, பாண், மாமிச உணவுகள், வெண்ணெய், குளிர்பானங்கள் சாப்பிட்டவர்களுக்கு அதிக அளவில் தொப்பையும் காணப்பட்டன.

வயது ஏற ஏற நமது உடல் பருமன் ஆவதற்கு காரணம், உடற்கூறின் தன்மைக்கு ஏற்ப நாம் நமது உணவை மாற்றியமைத்துக் கொள்ளாததே.

நமக்குத் தேவைப்படும் கலோரியின் அளவு வயது ஏறுகையில் குறைந்தால் உடல் பாரமானது சமநிலையில் இருக்கக்கூடும், அதிலும் முக்கியமாக அங்க அசைவுகள் குறையும்பொழுது. சிறுவயதைப் போலவே ஏறிடும் வயோதிகத்திலும் அதேபோலவே சாப்பிட எத்தனித்தால் பசித்தீயினுடைய குறைவான அளவால் உணவினுடைய செரிமானம் குறைந்து அதுவே ஊளைச் சதைக்குக் காரணமாகலாம்.

இதுவே இதயநோய், இரத்த அழுத்த உபாதை, நீரிழிவு உபாதை, கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களின் தொய்வான செயற்பாடு நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, எடுத்துக்கொள்ளும் மாத்திரைகளில் அடங்கியுள்ள இரசாயனப்பொருட்களை செரிக்கமுடியாமல் அவை இரத்தத்தில் தேங்குவது அதிகரித்தல் போன்ற உபாதைகளுக்கு வித்திடக்கூடும்.

அதனால் பசித் தீயினுடைய தன்மையை நன்கு கவனித்து அதற்கு கேடு வராத வகையில் சத்து நிறைந்த எளிதில் செரிக்கக் கூடிய உணவுகளை நடுத்தர வயதில் உண்பது மிகவும் அவசியம்.

பசியை மிதமான அல்லது சீரான அளவில் வைத்துக் கொள்ளக் கூடிய திறனை ஒரு நடைப்பயிற்சியின் மூலமாகவோ யோகப்பயிற்சிகளின் மூலமாகவோ நாம் பெறுவது நீண்ட ஆயுளுக்கு வழிவகுக்கும்.

பித்தப்பை கற்கள் வயிற்றினுடைய மேற்பகுதியில் வலியை ஏற்படுத்தும். சிலருக்கு வாந்தி, காய்ச்சல், மஞ்சள் காமாலை போன்ற உபாதைகளைத் தோற்றுவிக்கும். அறுபது வயது கடந்த பெண்டிருக்கு இது அதிகமாகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

பித்தப் பையினுள் அமைந்துள்ள திரவம் நாம் உண்ணும் கொழுப்புப் பொருட்கள் குடலைச் சேர்கையில் அதைச் செரிமானம் செய்தும் இரத்தத்திலுள்ள கொழுப்பை செரிக்கச் செய்வதிலும் பயன்படுகிறது.

அதிக அசைவில்லாத வாழ்க்கைமுறை, உடற்பருமன், அதிக நொறுக்குத் தீனி மற்றும் நீரிழிவு உபாதை ஆகியவற்றில் பித்தப்பை கற்கள் விரைவாக ஏற்படக்கூடும்.

பலநேரங்களிலும் பித்தப்பை கற்கள் அறிகுறிகளின் மூலமாக வெளிப்படுவதில்லை. ஒரு X-Ray அல்லது Ultra sound sonogram வழியாகவே கண்டறியப்படுகிறது. சிலசமயங்களில் தன் இடம் விட்டு நழுவி பித்தம் வயிற்றுக்கு வரக்கூடிய பாதையில் அடைப்பை ஏற்படுத்தி கடுமையான வலியை ஏற்படுத்தும்.

கற்கள் தாமாகவே குடலுக்குள் வந்துவிட்டால் அவை கரைந்து வெளியேறிவிடக்கூடும். அப்படியல்லாத பட்சத்தில் மருந்துகள் மூலமாகவோ, Shock wave therapy மூலமாகவோ அல்லது அறுவை சிகிச்சையின் மூலமாகவோ அவை நீக்கப்படவேண்டும்.

ஒரு பங்கு கொள்ளு, பத்து பங்கு தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து பாதியாகக் குறுக்கி வடிகட்டி அந்த நீரை ஒரு நாளில் பல தடவை சிறுகச் சிறுக பருகுவதின் வாயிலாக பித்தப்பை கற்கள் கரைவதற்கான வாய்ப்பு இருப்பதாக ஆயுர்வேதம் கூறுகிறது.

நெருஞ்சில் விதை, சிறுவழுதுணை, வெண் வழுதுணை, பெருமல்லிகை, பாதிரி போன்ற மூலிகைகளை கஷாயமாகக் காய்ச்சி சாப்பிடுவதன் மூலமாக சிறுநீரகக் கற்கள், பித்தப்பை கற்கள் போன்றவை விடுபடுவதற்கான வாய்ப்புகள் நிறைய உள்ளன.

உத்வர்த்தனம் எனப்படும் ஓர் ஆயுர்வேத சிகிச்சைமுறை இந்த இரு உபாதைகளுக்கும் நன்மையைத் தரக்கூடும். வயிற்றினுடைய வலதுபுற அடிப்பகுதியிலிருந்து மேல்நோக்கித் தேய்த்து இடதுபுறம் கீழ்நோக்கி ஆழமாக கொள்ளு மாவை புளித்த மோருடன் கரைத்து சூடாக்கி தேய்த்துவிடுதல். மறுபடியும் இடதுபுறத்திலிருந்து வலது பகுதிக்குத் தேய்த்துவிடுதல் போன்ற சிகிச்சை மூலமாக வயிற்றிலுள்ள ஊளைச்சதை கரைவதுடன் பித்தப்பை கற்களும் சுருங்குவதற்கான வாய்ப்புள்ளது.

# முறையற்ற இயக்குநர் சபை நியமனம்

# இரத்துச் செய்யுமாறு கோரிக்கை

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கென புதிதாக நியமிக்கப்பட்ட இயக்குநர் சபையை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களை விந்தன் கனகரட்ணம் பரஞ்சோதி இந்திர: ராசா ஆகியோரால் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த சபையை ரத்துச் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நியமனத்திலுள்ள ஒழுங்கீனங்களை விளக்கி அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

நெடுந்தீவு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை நியமனங்கள் அந்த சங்க உறுப்பினர்களின் கோரிக்கைகளை கவனத்துக்கு எடுக்காது தங்களினால் நியமிக்கப்பட்டமை அச்சங்க உறுப்பினர்களின் உரிமைகளை மதிக்காது செயற பட்டுளளீர்கள் என்பதை உணர்த்துகின்றது. இது சம்பந்தமாக உறுப்பினர்கள் 59 பேரின் கையொப்பங்களுடன் முதலமைச் சருக்கு அனுப்பப்பட்ட 23.05.2015 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரதி தங்களுக்கும் எமக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

-அத்துடன் மாகாணசபையின் பொது மக்கள் முறைப்பாட்டுக் குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலும் அதில் 08.06.2015 ஆம் திகதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும் உடனடியாக தேர்தல்களை நடாத்தி அங்கத்தவர் களின் ஜனநாயக உரிமைகளை நிறைவேற்றுமாறும் 10.06.2015 ஆம திகதி தங்களுக்கு பேரவைச் செயலகத்தினால் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் 06.05.2015 ஆம் திகதியிடப்பட்ட கடித மூலமும் பின்னர் 17.06.2015 ஆம் திகதியிடப்பட்ட கடித மூலமும் மூன்று பேர் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பல மாதங்களாக கிளைக் குழுத் தேர்தல்கள் நடாத்தக்கூடிய சூழல்களும் தடையில்லா நிலமையும் நியாயங்களும் இருந்தும் அவற்றை உதாசீனம் செய்து இந்த நியமனங்கள் செய்யப்பட்டுள்ளமை மாகாணசபையின் சிறப்புரிமைகளை மீறிய செயற்பாடென நாம கருதுகின்றோம்.

இந்த இயக்குநர்சபை உறுப்பினர்கள் தெரிவின்போது இது வரை கடைப்பிடிக்கப்பட்ட மரபுகள் மீறப்பட்டுள்ளதாக எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள எது. அனேகமான சந்தர்ப்பங்களில இயக்குநர்கள் நியமிக்கும் போது கூட்டுறவுத்துறையின் உயரதிகாரிகள் அல்லது நிர்வாக சேவையிலுள்ள அரச அதிகாரிகள் அல்லது கூட்டுறவுச் சேவையில் பணியாற்றி அனுபவமுள்ள அதே சங்க அங்கத்தவர்கள் என சங்கதின் வளர்ச்சியில் பங்காற்றக் கூடியவர்களையே நியமிப்பது வழக்கமாகும்.

ஆனால் தங்களினால் நியமிக்கப் பட்டவர்கள் இதில் எந்த வகையைச் சார்ந்தவர்களும் அடங்கவில்லை என்பது இந்த நியமனத்தில் எமக்குச் சந்தேகம் ஏற்படக் கரரணமாகிறது. தங்களால் நியமிக்கப்பட்டவர்களில் தலைவர் சுமார் 30 வருடங்கள் சங்கத்துடன் எதுவித தொடர்பு மற்ற நிலையிலும் அங்கத்தவர் அல்லா நிலையிலும் வெளிநாட்டில் வசித்துள்ளார்.

இந்த நிலையில் சங்கத்தின் வளர்ச்சிக்கு இவர்களினால் எதுவும் செய்ய முடியாது என்பது எமது அசைக்கமுடியா நம்பிக்கையாகும். தற்போதைய நிலையில தேர்தல்களை நடாத்தி தெரிவு செய்யப் பட்டவர்களின் கையில் நிர்வாகத்தை ஒப் படைப்பதே அச்சங்கத்துக்கு நன்மை பயகும். இல்லாதவிடத்து நாம் மேலே கூறியவாறு தகுதியுள்ளோரை இயக்குநர்களாக நியமித்து சங்க வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மீளாய்வு பெறுபேறுகள் இம்மாத இறுதியில்

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் இம்மாதம் 30 ஆம் திகதி வெளியாகவுள்ளன. பெறுபேறுகளை மீளாய்வு செய் வதற்காக ஒரு இலட்சத்து ஏழாயிரம் பேர் வரை விண்ணப்பித்திருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்என். ஜே புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

பாடசாலை பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அந்தந்த பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

## முழுநேரப் பயிற்சி நெறி

பட்டமேற்படிப்பு டிப்ளோமா (உள்ளக) முழுநேர பயிற்சி நெறி 2016 இற்கான விணணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப் பங்களை கையளிக்க வேண்டிய இறுதித் திகதி இம்மாதம் 24 ஆம் திகதி ஆகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சின் தேசிய கல்வி பீடக் கிளையின் ஒருங்கிணைப்புடன் கொழும்பு- பேராதனை- மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இப்பாட நெறியில் இண்ணத்துக் கொள வதற்கான கல்விக் தகைமைகள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் கடந்த 26ஆம் திகதி வெளியிடப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# வெலிக்கடை கொலை அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம்

வெலிக்கடை கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு, இந்த விசாரணை அறிக்கையை கையளித்துள்ளது.

கொலைசெய்யப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நிவாரண உதவிகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில், குறித்த அறிக்கையில் கூடுதல் கவனம் செலுத்தப் பட்டுள்ளதாக நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பில், விசாரணைகள் நடைபெற்று வருவதால அவை தொடர்பில் தற்போதைக்கு கருத்துக் கூற முடியாது என்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ ஆட்சிக்காலத்தில் கடந்த 2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் 27 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில், மைத்திரி ஆட்சியில் மீண்டும் விசாரணைகள் ஆரப்பிக்கப்பட்டு நீதியமைச்சரால் விஷேட குழுவொன றும் நியமிக்கப்பட்டது. குறித்த கலவரம் நடைபெற்றபோது, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர கோத்தாபாய ராஜபக்ஷவின் பணிப்பிலேயே சிறைக்கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக குற்றஞ சாட்டப்பட்டு அவரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

இந்நிலையில், விசாரணைகள பூரணமாக நிறைவுபெற்றதன் பின்னரே குறித்த கொலைச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் யாரென்பது வெளிவரும் அதற்கு முன்னர், உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காட்டு யானைகள் அட்டகாசம்

# வனவளத் திணைக்களத்தை முற்றுகையிட்டு போராட்டம்

புத்தளம் மாவட்டத்தின் கல்லடிப் பகுதியில் அடிக்கடி காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக பொதுமக்கள் உயிரிழப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் நேற்றுமுன் தினம் அதிகாலை மோட்டார் சைக்கிளில் சென்றவரை காட்டு யானை தாக்கியதில் அவர் படுகாயமடைந்து புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனையடுத்து அப் பிரதேச மகள் கருவலகஸ்வெள வனவளத் திணைக்கள அதிகாரி அலுவலகத்தை நேற்றுமுன்தினம பகல் முற்றுகையிட்டனர்.




இந்த முற்றுகையின் போது பொலிஸார் மக்களை அவ்வலுவலகத்தை முற்றுகையிடுவதைத தடுத்ததுடன் அவ்வலுவலகத்தின அதிகாரியைச் சந்திப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

பின்னர் மக்கள் கூடி நின்ற இடத்திற்கு வருகை தந்த வன வளத் திணைக்கள அதிகாரி அங்கு கூடி நின்றவர்களைச் சந்தித்து அடுத்த மாதம் 04 ஆம் திகதிக்கு முன்னர் மின்சார வேலிகளை அமைபபதற்கு நடவடிக்கை எடுக கப்படும் என தெரிவித்ததைய டுத்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# 100 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்தவுடன் இணைந்து போட்டி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 100 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து போட்டியிடவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசியல் கட்சியொன்றினது தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் பெரும்பாலும் தேர்தலில் போட்டியிடுவார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் சந்தர்ப்பம் வழங்கப்படாவிட்டால், வேறும் ஓர் கூட்டமைப்பை அமைத்து அதில மகிந்த பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவார் என தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# பிரதமராகும் பகல் கனவை காண்கிறார் மகிந்த ராஜபக்ஷ

## என்கிறார் வடமேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஓகஸ்ட் மாதம் 17ஆம திகதி பிரதமராகும் பகல் கனவில் இருந்து விழித்துக் கொள்ளுமாறு வடமேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஜே.சீ.அல வத்துவல தெரிவித்துள்ளார்.

மாவத்தகம பிரதேசத்தில் இடம பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும போது அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

கடந்த ஆட்சியன் போது முன் னாள் ஜனாதிபதி மற்றும் அவரது சகபாடிகளின் ஊழல் மோசடிகளை மறைத்துக் கொள்வளதற்காகவே அவர் மீண்டும் அதிகாரத்திற்கு வரும் பணிகளை ஆரம்பித்துள்ளார்.

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு மேற்கொண்ட நடிவடிக்கைகளை வேறு திசைக்குத் திருப்பிக்கொளவதற்காக மகிந்த தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

எனினும் ஓகஸ்ட் 17ஆம் திகதி இந்நாட்டு புத்திசாலி மக்கள் அவரை தோற்கடித்து விடுவார்கள்.

மோசடிகாரர்களை பாதுகாப்பதற்கு பதிலாக அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு பொறுப்பு கூறுகின்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மை கொண்ட நாடாளுமன்றத்தை ஓகஸ்ட் மாதம 17ஆம் திகதி அமையப்போவதனை மகிந்த ராஜபக்சவினால் பார்த்துக்கொள்ளமுடியும்.

முன்னாள் ஜனாதிபதியை கடந்த ஜனவரி 08 ஆம் திகதி மககளால் துரத்தப்பட்டார் மீண்டும் மக்கள் அவருக்கு சந்தர்ப்பம் வழங்கமாட்டார்கள்.

கடந்த 10 வருட ஆட்சியினுள நாட்டு மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்காத முன்னாள ஜனாதிபதி மீண்டும் மக்கள் ஆதரவு கேட்பது எந்த அடிப்படையில் என எனக்குப் புரியவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஊழல மற்றும் மோசடியினை தோற்கடிப்பதற்கு மக்கள் ஆயத்தமாக உள்ளனர் என்றார்.

20. $\frac{2}{8}$ இற்குரிய சமவலுப்பின்னத்தைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக

1) $\frac{3}{5}$ 2) $\frac{1}{2}$ 3) $\frac{1}{4}$

21. கமாலும், நிமாலும் சமமான வயதை உடையவர்கள் நிமால், சிமாலை விட வயதில் கூடியவன் ஆயினும் குமாரை விட வயதில் குறைந்தவன் எனின் இவர்களில் வயதில் குறைந்தவன் யார்?
1) குமார் 2) சிமால் 3) நிமால்

22. ஒரு சவர்க்காரக் கட்டியையும் அதன் மூன்று மடங்கு விலையுள்ள பற்பசையையும் வாங்குவதற்கு கமல் 52 ரூபாவை செலவிட்டான் எனின் பற்பசையின் விலை யாது?
1) 36 ரூபா 2) 13 ரூபா 3) 39 ரூபா

23. 15 பேர் பங்குபற்றத் திட்டமிடப்பட்டிருந்த உல்லாசப் பயணம் ஒன்றுக்காக ஒருவர் கொடுக்க வேண்டிய பேருந்துக்கட்டணம் 300 ரூபா, இதில் 3 பேர் பங்குபற்றாமையால் குறித்த பேருந்துக் கட்டணம் எல்லாப் பங்குபற்றுபவர்களுக்கு இடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஒருவர் மேலதிகமாகக் கொடுக்க வேண்டிய கட்டணம் யாது?
1) 80 ரூபா 2) 75 ரூபா 3) 90 ரூபா

24. இது அம்மாவுக்கும் மகனுக்கும் இடையே நடைபெற்ற ஒரு உரையாடல் மாறியுள்ளது வரிசைக்கிரமமாக மாற்றினால் கிடைக்கும் விடை யாது?
1) அதை வாங்கப் பணம் போதாது மகனே
2) இதோ கை அசைகிற பொம்மை வேண்டும்
3) அம்மா எனக்கு கை அசைக்கிற பொம்மை வேண்டும்
4) அப்பா காசு தந்தால் வாங்கித் தருகிறேன்
5) அப்பா காசு தந்தாரா அம்மா?
1) 3, 1, 4, 2, 5 2) 5, 4, 2, 3, 1 3) 4, 3, 2, 1, 5


(09) 25 - 27 வரையுள்ள வினாக்களுக்கு வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைக் கண்டு கோடிடுக

25. காரம் + பணம் = காரணம் ⟶ அருமை + தவம் = -------------
(i) அருவம் (ii) வரும் (iii) அருதம்

26. திருமதி + வலம் = வருமதி ⟶ பருவம் + உதவி = -------------
(i) விபரம் (ii) உருவம் (iii) தவம்

27. மதி + ருசி = திரு ⟶ தரு + சிரி = -------------
(i) ரிசி (ii) தரி (iii) ருசி

28. X எனக் குறிக்கப்பட்டுள்ள முகத்தில் காணப்படும் எண்ணையும் அதன் திருத்தமான தோற்றத்தையும் தெரிந்து கோடிடுக



(i) 4 (ii) 4 (iii) 5

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 1.2 | 2.1 | (02) 3.2 | 4.3 | (03) 5.1 | 6.2 |
| 7.2 | 8.1 | (05) 9.2, 1, 3, 5, 4 | 10.5, 1, 4, 3, 2 | (06) 11.3 | 12.3 |
| 13.2 | 14.3 | (07) 15.1 | 16.1 | (08) 17.3 | 18.1 |
| 19.2 | (09) 20.1 | 21.3 | 22.2 | 23.2 | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015
பகுதி - I
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு




எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) 01ஆம், 02ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள உருவங்களுடன் மிக நெருங்கிய தொடர்பினை உடைய சொற்கள் அடங்கிய விடையின் கீழ் கோடிடுக


01. 

(i). பறவைகள், வியாபாரிகள், மருந்து
(ii). மரப்பலகை, மருந்து, உணவு
(iii). விலங்கு, நிழல், மரப்பலகை


02. 

(i). வியாபாரி, அதிபர், பெற்றோர்
(ii). கடதாசி, தொழிற்சாலைகள், விளையாட்டு
(iii). கற்றல், மாணவர், ஆசிரியர்

(02) 03ஆம், 04ஆம் வினாக்களுக்கு பிழையான படத்தின் கீழ் கோடிடுக

03. 

(i) (ii) (iii) (iv)

04. 

(i) (ii) (iii) (iv)

(03) 05 - 06 வரையான வினாக்களுக்கு 1, 2, 3, 4, 5 இலக்கங்களை இடுவதன் மூலம் ஒழுங்குபடுத்துக

05. 

( ) ( ) ( ) ( ) ( )


06.



( ) ( ) ( ) ( ) ( )


(04) 07ஆம், 08ஆம் வினாக்களுக்கு வினாக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய விடையைக் கண்டு கீறிடுக

07.



(i) i - 5, ii - 9 (ii) i - 3, ii - 8 (iii) i - 2, ii - 5

08.



(i) i - 11, ii - 6 (ii) i - 8, ii - 7 (iii) i - 7, ii - 9


(05) 09ஆம், 10ஆம் வினாக்களுக்கு ஆரம்பத்தில் தரப்பட்ட முகத்தை முகம்பார்க்கும் தளவாடியில் பார்க்கும் போது எவ்வாறு தோன்றும் எனக்கண்டு கீறிடுக

09.



(i) (ii) (iii) (iv)


10.



(i) (ii) (iii) (iv)

(06) 11ஆம், 12ஆம் வினாக்களுக்கு வினாக்குறி வந்துள்ள இடத்தில் வரவேண்டிய விடையைக் கண்டு கீறிடுக


11.



(i) 20 (ii) 18 (iii) 11




12.



(i) (ii) (iii)

(07) கீழே தரப்பட்ட கணிதச்செய்கையை அவதானித்து விடை தருக



அடையாளம் தரப்பட்ட இடத்தில் வரவேண்டிய அடையாளத்தைக் கண்டு கீறிடுக

இங்கு = என்பது சமனைக் குறிக்கிறது

13.  என்ற இடத்தில் வரவேண்டிய அடையாளம் எது?


1) பெருக்கல் 2) கூட்டல் 3) கழித்தல்

14.  என்ற இடத்தில் வரவேண்டிய அடையாளம் எது?

1) கழித்தல் 2) கூட்டல் 3) பெருக்கல்


15. கீழே தரப்பட்ட அமைப்பில் எத்தனை சதுரங்கள் உள்ளன?

1) 8
2) 9
3) 10




(08) 16 - 18 வரையான வினாக்களுக்கு அடுத்துவரவேண்டிய அமைப்பு எதுவெனக் கண்டு அதன் கீழ் கோடிடுக

16.




(i) (ii) (iii) (iv)

17.



(i) (ii) (iii) (iv)

18.



(i) (ii) (iii) (iv)

19. Bயின் மனைவி A ஆவார். C யின் மகன் B ஆவார். Dயின் கணவர் C ஆவார். பின்வருவனவற்றில் எது A யிற்கும் D யிற்கும் இடையேயுள்ள உறவுமுறை ஆகும்?

(i) A யின் சகோதரி D ஆவார் (ii) A யின் மாமி D ஆவார்

(iii) A யின் தாய் D ஆவார்

# மீண்டுமொரு தேர்தலில் மகிந்த வெற்றிபெற முடியாது

## உறுதியுடன் கூறுகிறார் அனுரகுமார

அரச வளங்கள், பெருந்தொகையான பணம், இராணுவத்தினரைக் கையில் வைத்துக்கொண்டு நடத்திய தேர்தலில் தோல்வி கண்ட மகிந்த ராஜபக்சவினால் மீண்டுமொரு தேர்தலில் வெற்றி பெற முடியாது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கடுவலை தேர்தல் தொகுதியில் நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கடந்த காலங்களில் இழைத்த தவறுகளைக் கொண்டு பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு கற்றுக்கொண்ட பாடங்களுக்கு அமைய நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு ஜே.வி.பி தலைமைத்துவம் வழங்கும். சகல வளங்களையும் வைத்துக்கொண்டு தேர்தலில் வெற்றிகொள்ள முடியாத மகிந்த ராஜபகஷ மீண்டும் நாட்டின் தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்வார் என மக்கள் நினைக்கக் கூடாது. மகிந்த ராஜபக்ஷ மீண்டும் நாட்டின் தலைமையை கைப்பற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதை ஜே.வி.பி உறுதிப்படுத்துகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என நாம் கோரவில்லை. தானே பதவியிலிருந்து வெளியேறும் திகதிக்கான நாளை மகிந்த குறித்துக்கொண்டார். அவசரமாக நடததப்பட்ட இத்தேர்தலுக்கு பெரும் பணம் செலவிடப்பட்டது. அதே நேரம், ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடத்தப்படும் விசாரணைகளைத் தடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே மகிந்த மீண்டும் அரசியலுக்கு வரவேண்டும் என அவரும், அவரைச் சார்ந்த குழுவும் மும்முரமாக செயற்படுகிறது. மகிந்த ராஜபக்ஷவின் ஆவிக்கோ அல்லது அவரை தாங்கித் திரியும் குழுவினருக்கோ மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ஜேவிபி ஒரு போதும இடமளிக்காது.

இதேவேளை, குறுகிய கால அரசாங்கத்தை அமைத்தவர்கள் தேர்தலைக் காண்பித்து நடந்துகொண்ட முறையைப் பார்க்கும் போது நீண்டகாலத்துக்கு ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும் என்ற சந்தேகம் தோன்றியுள்ளது. குறுகிய காலத்தில் பெரிய மோசடி இடம்பெற்றுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டின் எதிர்கால சந்ததிக்கு சிறந்ததொரு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொடுக்கக் கூடிய அரசியல் சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கு ஜே.வி.பி தலைமைத்துவம் அளித்து செயற்படும் என்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# ஒய்வுபெறும் தூதுவருக்கு ஜனாதிபதி பாராட்டு

(கொழும்பு)

ஓய்வு பெற்றுச்செல்லும் இலங்கைக்கான முன்னாள் ஹொங்கொங் தூதுவர் டாக்டர் தோமஸ் ஷங்க் (Dr Thomas Cheung) கிற்கான பிரியாவிடை நிகழ்வில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கலந்துகொண்டு அவருக்கான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, சுமார் 29 வருடங்களாக இலங்கைக்கான ஹொங்கொங் தூதுவராக தனது சிறப்பான கடமையை வழங்கிய தூதுவர் டாக்டர் தோமஸ் ஷங்க்கிற்கு தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தோமஸ் ஷங்க் தனது சேவைக்காலத்தில் நாட்டினதும் மக்களினதும் அபிவிருத்திக்காக முன்னின்று சேவையாற்றியவர்களில் ஒருவாராவார். அவ்வகையில் கொலன்னாவ பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டம், நிக்கவரெட்டிய பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வைத்தியசாலைக்கான உதவிகள், அத்துடன் வீடுகளின்றி வாழும் மக்களுக்கு வீடுகளமைத்து கொடுக்கும் திட்டங்களில் அரசாங்கத்துடன் இணைந்து வெளிநாட்டு தூதுவர் என்ற வகையில் பற்பல காரியங்களை ஆற்றியுள்ளார் என்பது விசேட அம்சமாகும் எனத் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த தோமஸ் ஷங்க், எனது ஓய்வு காலத்திலும் நான் இலங்கை நாட்டுக்கு தேவையானதும் என்னால் முடிந்ததுமான பல அரிய சேவைகளை செய்ய காத்திருக்கிறேன். அத்துடன் வைத்தியசாலைகளுக்கும் பாடசாலைகளுக்கும் தேவையான நிதியுதவிகளை செய்யவும் விருப்பமுள்ளதாக தெரிவித்தார்.

## அமைச்சர்களின் பதவிகள் நடைமுறையில்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல் நிறைவடைந்து புதிய அமைச்சர்கள் பதவியேற்கும் வரை தற்போதைய அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் பதவிகள் நடைமுறையில் இருக்கும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி, பொதுத்தேர்தலின் முன்னர் காபந்து அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்கள் மாத்திரமே செயற்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 19 ஆவது திருத்தம், பொதுத்தேர்தல் முடிவடைந்த தன் பின்னரே நடைமுறைக்கு வரும் என்பதால் அமைச்சரவை அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் பதவிகள் இந்த பொதுத் தேர்தலின் போது ரத்துச் செய்யப்படாது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# குடும்ப நலனிற்காகவே அரசை பயன்படுத்தினார் மகிந்த

## மன்னப்பெரும குற்றச்சாட்டு

(கொழும்பு)

குடும்ப நலனிற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ அரசாங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.


சில இலாபமீட்டும் அரச நிறுவனங்களின் வருமானத்தை மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரச்சாரத்திற்கும் குடும்ப நலனிற்காகவும் பயன்படுத்தியதாகக குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம ஆகிய நிறுவனங்களில் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களின் இலாபங்கள் திறைசேரிக்கு செல்ல வேண்டும் என்ற போதிலும் அந்தப் பணம் வேறும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

# றமழான் சிந்தனை

சின்னப் பள்ளி




எவர் றமழான் மாதத்தில் நோன்பு நோற்று தராவிஹ், வித்ர் மற்றும் சுன்னதான தொழுகையுடன் நற்காரியங்களில் ஈடுபட்டவருக்கு பிரதியாக தனது திருப்தியையும் மன்னிப்பையும் அல்லாஹ் வழங்குகிறான்

(நூல் - தப்ரான்)

ஸஹர் முடிவு : அதிகாலை 4.19
நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.36

(105)

# நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை



## கற்பனைக்குமெட்டாத அருள் பாலி நாயகி நீ

குடம் குடமாக புரளும் கடல்
குவலியத்தின் அடி தேடும் ஆழி
வடமறுத்து சென்ற பவளத்தேர் காணுமோ?
விடம் அமர்ந்த நாககல் தடவும்
கருடர் அமர்ந்த இடம் நாடு மனமே
இடர் தீர்ந்து இருமையும் சிறக்குமே
தெப்பங்கள் கூடியே தேவியை நிராட்ட
கற்பனைக்கும் எட்டாத காயத்திரி அருள்பாலி

மகிழ்நன்
மண்டைதீவு

## குறைபோக்கிடுவாய் தாயே

நயினையிலே குடி கொண்டவளே
நாளும் உனைப் பாடுகின்றோம்
எங்கள் குறை போக்கிடுவாய் - தாயே
இன்று உன் தீர்த்த விழாக்காண வரும்
அடியார்கள் அனைவரையும் காத்திடுவாய்
கடல் கடந்து வரும் அடியார்கள்
குறை தீர்க்கும் நயினைத் தாயே!
எம் மீது கருணைகொள்வாயா?

சி.சேரன்
அச்சுவேலி

## கவலை தீர்ப்பாயோ!


நயினையின் தீர்த்தம் காண
கடல் கடந்து ஓடிவரும்
பக்தர்களின் சுமைகளை
தீர்த்துவைக்க வரமருள்வாய் - தாயே!

அன்னை தனைத் தேடிவரும்
பக்தர்களின் கவலையை
கருணைகொண்டு பார்ப்பாயோ?
கவலை தனைத் தீர்ப்பாயோ?

சிவனுகா
யாழ்ப்பாணம்

# ஆர்.கே.நகர் இடைத்தேர்தல்

## ஜெயலலிதா பெரு வெற்றி



ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் அதிமுக வேட்பாளராக போட்டியிட்ட முதல்வர் ஜெயலலிதா அமோக வெற்றி பெற்றுள்ளார்.

இத்தேர்தலில் ஒட்டுமொத்த 2,40,543 வாக்குகளில் 181032 வாக்குகள் பதிவாகின. இதில் வாக்கு எண்ணிக்கை நேற்று முடிவடைந்த நிலையில் முதல்வர் ஜெயலலிதாவுக்கு 160921 வாக்குகளும், இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் மகேந்திரனுக்கு 9669 வாக்குகளும் கிடைத்தன. இதன் மூலம் 1,51,252 வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயலலிதா வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா வெற்றி பெற்றதை அடுத்து அ.தி.மு.க தொண்டர்கள் மிகுந்த உற்சாகம் அடைந்ததோடு இனிப்பு வழங்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் அ.தி.மு.க தலைமைக் கழகத்திலும், ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீடு முன்பும் அ.தி.மு.க தொண்டர்கள், மகளிர் அணியினர் திரண்டு பட்டாசுகள் வெடித்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த வெற்றியானது 2016 இல் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலுக்கான முன்னோட்டமென ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

# 100 கோடி ரூபா மதிப்புள்ள பாம்பு விஷம் பிடிபட்டது



மேற்குவங்க மாநிலம் சிலிகுரி அருகே ரூ.100 கோடி மதிப்புள்ள பாம்பு விஷம் பறிமுதல் செய்யப்பட்டது.

பிரான்ஸில் இருந்து வங்க தேசம், சிலிகுரி, பூட்டான் வழியாக சீனாவுக்கு பாம்பு விஷம் கடத்தப்படுவதாக மேற்கு வங்க வனத் துறைக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் சோதனை நடத்திய வனத்துறை அதிகாரிகள் சிலிகுரி அருகே 6 பேர் கொண்ட கும்பலை பிடித்தது.

அவர்களிடம் மூன்று குடுவைகளில் இருந்த பாம்பு விஷம் பறிமுதல் செய்யப்பட்டது. அவற்றின் சர்வதேச சந்தை மதிப்பு ரூ.100 கோடியாகும். கடத்தல் கும்பலைச் சேர்ந்த 6 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

உலகச் செய்திகள்

# இந்திய அர்ஜுன் பீரங்கியை பாராட்டும் சீன இராணுவம்



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அர்ஜுன் பீரங்கிக்கு சீன இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

முதல்முறையாக சீன இராணுவம் தனது நவீனமயமாக்கல் பற்றிய இரகசியங்களை இந்திய ஊடகங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளது. இது இந்தியா உடனான இராணுவ உறவில் ஒரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகின்றனது.

இதேவேளை 3 ஆவது தலைமுன்ற் போர் பீரங்கியான அர்ஜுன் பீரங்கிகள் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனமான D.R.D.O நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்த பீரங்கிகள் அதிகபட்சமாக மணிக்கு 67 கி.மீ வேகத்தில் செல்லக்கூடியவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலை யில், இந்தியாவில் உருவாக்கப்பட்ட அர்ஜுன் இராணுவ பீரங்கிகள் இந்தியாவின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற மிகச்சிறந்த பீரங்கிகள் என சீன இராணுவ அதிகாரியான கோலோனல் லியூ டிகாங்க், பாராட்டு தெரிவித்துள்ளார்.

# விபத்தில் சிக்கியது இராணுவ விமானம் இந்தோனேஷியாவில் ஐவர் பலி



இந்தோனேஷிய விமானப் படைக்குச் சொந்தமான ஹேர்க்யூலஸ் சி 130 (Hercules C-130) என்ற இராணுவப் போக்குவரத்து விமானமொன்று விபத்திற்குள்ளானதில் ஐவர் பலியாகியுள்ளனர்.

12 விமானப் பணியாளர்களுடன் பயணித்த இந்த விமானம் நாட்டின் மூன்றாவது மிகப்பெரிய நகரான மெடானிலுள்ள மக்கள் குடியிருப்புப் பகுதியில் விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்திற்குள்ளான விமானத்தில் இருந்து புகை வெளியேறுவது தொடர்பான நிழற்படங்களை இந்தோனேஷிய தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று ஒளிபரப்பியுள்ளது.

மெடான் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சிறிது நிமிடங்களில் விமானம் விபத்திற்குள்ளானதாக இந்தோனேஷிய விமானப் படையின் பேச்சாளர் டுவீ படமாண்டோ (Dwi Badarmanto) தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.


12 விமானப் பணியாளர்கள் குறித்த விமானத்தில் பயணித்துள்ளதாக விமானப் படையின் நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதி ஆகஸ் டுவீ பியுராண்டோ (Agus Dwi Putranto) குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த விமானத்திலிருந்த பயணிகளின் எண்ணிக்கை இதுவரை தெரியவரவில்லை.

கடந்த 10 வருடங்களில மெடான் பகுதியில் இரண்டாவது தடவையாக விமானம் விபத்திற்குள்ளாகியுள்ளது.

3 தசம் 4 மில்லியன் மக்கள் வசிக்கும் மெடான் பகுதியில் 2005 ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் போய்ங் 737 பயணிகள் விமானம் விபத்திற்குள்ளாகியதில் 143 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அழிவின் விளிம்பில் இந்திய எலி மான்கள்



இந்திய காடுகளில் உருவத்தில் எலிபோல் 3 முதல் 3.5 கிலோ எடை மட்டுமே உள்ள அபூர்வ வகை இந்திய புள்ளி எலி மான்கள் அழிவின் விளிம்பில் உள்ளதாக பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

மான்களில் இந்திய புள்ளி எலிமான்கள் மிகவும் அபூர்வமானவை. இவை இந்தியாவில் தமிழகம், கேரளம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் காணப்படுகின்றன. "டிராகுலிடே" எனும் குடும்பத்தைச் சேர்ந்த புள்ளி எலிமான்கள் இந்தியாவில் மட்டுமே உள்ளன. இவற்றின் சிற்றினங்கள் மட்டுமே தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவிலும், மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவிலும் உள்ளன.

இந்த புள்ளி எலி மான்கள் இடத்துக்குத் தகுந்தாற் போல் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. பொதுவாக "இந்தியன் செவ்டைன்" (குட்டி ஆடு) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவை இரவில் மட்டுமே நடமாடும். ஆபிரிக்காவில் காணப்படும் எலிகள் 4 கிலோ வரை காணப்படுகின்றன.

ஆனால் இந்த எலி மான்கள் 50 முதல் 60 செ.மீ. நீளமும் 3 முதல் 3.5 கிலோகிராம் எடையுடன் உருவத்தில் எலி போல் காணப்படுவதால் புள்ளி எலி மான்கள் என அழைக்கப்படுகின்றன. தற்போது இந்த இந்திய புள்ளி எலிமான்கள் அழிவின் விளிம்பில் உள்ளதாக பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

# காஸா சென்ற கப்பலை தடுத்து நிறுத்தியது இஸ்ரேல்



பலஸ்தீன ஆதரவாளர்களால் காஸா நோக்கிச் செலுத்தப்பட்ட கப்பலொன்றை இஸ்ரேல் கடற்படையினர் வழிமறித்து தமது நாட்டு துறைமுகமொன்றுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

2007 ஆம் ஆண்டு முதல் ஹமாஸ் இயக்கத்தினால் நிர்வகிக்கப்படும் காஸாவிற்கான கடற்போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையை மீறும் வகையிலான குறித்த படகின் நோக்கத்தை தடுக்கும் வகையில் சர்வதேச கடற்பரப்பில் தாம் இந்த நடவடிக்கையை மேற் கொண்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

படகில் தமது படையினர் தேடுதல் மேற்கொண்ட போது எந்தவொரு வன்முறைச் சம்பவங்களும் ஏற்படவில்லை என இஸ்ரேல் கூறியுள்ளது.

கடல்போக்குவரத்திற்கு விதிகப்பட்டுள்ள தடை குறித்து கவனத்தை ஈர்க்க வைக்க வேண்டும் என இந்தப் பயணத்தை மேற்கொண்டதாக செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் இந்த தடை பாதுகாப்பிற்கு அவசியமான ஒன்றென இஸ்ரேல் கூறியுள்ளது.

மருந்துகள் மற்றும் சூரிய சக்தி கலங்கள் உள்ளிட்ட மனிதாபிமான பொருட்களையே தாம் கொண்டு சென்றதாக குறித்த கப்பலில் இருந்த பலஸ்தீன ஆதரவு செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# அதிக வருவாய் தரும் மீன் வளர்ப்புத் திட்டம்

## கிழக்கில் ஆரம்பம்



(மட்டக்களப்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் வாழ் வாதாரத்தை முன்னேற்றும் செயற்றிட்டங்களின் ஒரு கட்ட மாக இந்தத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

கடல் வாழ் மீனினமான கொடுவா மீன்களை வாவியில் வளர்க்கும் இந்தத் திட்டம், அதிக வருவாயை ஈட்டிக் கொடுக்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பின் நாவலடிப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப் பட்ட உள்ளூர் மீனவர்கள் மத்தியில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிய மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் கொடுவா மீன்க ளுக்கு நல்ல கிராக்கி உள்ளது என நீரியலாளர் சுந் தரம் ரவிக்குமார் தெரிவித்தார்.

மிதக்கும் கூடுகளில் வளர்க்கப்படும் மீன் குஞ்சுகள் 6 மாதங்களில் ஒவ்வொன்றும் 750 கிரம் முதல் 1000 கிராம் எடையுடையதாக வளர்ந்து விடும் என்பதோடு, சந்தைப்ப டுத்தலின்போது மீன் வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் நல்ல வருமா னத்தை ஈட்ட முடியும் எனவும் குறிப்பிட்டார்.

செலவு குறைந்த முறையில் மேற்கொள்ளப்படும் இந்த திட்டத்தில் வளர்க்கப்படும் மீன்களுக்கு உணவாக வாவியி லும் கடலிலும் பிடிக்கப்பட்டு, சந்தைப்படுத்தப்படாத மீன்களும் மீன் சந்தையில் எஞ்சியிருக்கும் கழிவுகளுமே கொடுக்கப்ப டுவதாக மீனவர்கள் தெரிவிக் கின்றனர்.

இந்தத் திட்டத்திற்கு ஐரோப் பிய ஒன்றியம் மற்றும் ஐநா.வின் உணவு மற்றும் விவசாய ஸ்தா பனம் பங்களிப்பு செய்கிறது. தேசிய நீர் வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார வாரியம் இதனைச் செயல்படுத்துகிறது.

# கம்பஹாவில் சந்திரிக்கா களம் குதிப்பு

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிக்கா பண்டாரநாயக்க குமார துங்க எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட தீர்மானித் துள்ளதாக அவரின் செயலாளர் பீ.திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் கம்பஹா மாவட்டத்தில் போட்டி யிட தீர்மானித்துள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்றிடம் சற்று முன்னர் தெரிவித்துள்ளார்.

# வேட்பாளர் தெரிவில் ஜனநாயகம் வேண்டும்

## சம்பந்தனிடம் கோரிக்கை

(கொழும்பு)

இம்முறை நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறந்த கல்வித் தகைமையுடைய மிகப் பொருத்தமான வேட்பா ளர்களை நேர்மையாகவும் ஜனநாயக முறைப்படியும் தெரிவு செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளார் வடக்குமாகாண சபை உறுப்பி னரும் பிரதி அவைத்தலைவ ருமான அன்ரனி ஜெனநாதன். இது குறித்து அவர் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந் தனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு

இலங்கையின் நாடாளு மன்றம் கலைக்கப்பட்டு விட்டது. முழு இலங்கையும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தலை எதிர்கொள்ள வேண் டிய நிலையில் உள்ளது. கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் வேட்பாளர் நிய மனங்களில் உரிய நடை முறைகள் பின்பற்றப்படாமையும் கல்வித் தகைமை அற்ற பொருத்தமற்ற வேட்பாளர் நியமனங்கள் நடைபெற்றுள்ளன. இம்முறை நடைபெறும் நாடா ளுமன்றத் தேர்தலில் சிறந்த கல்வித் தகைமையுடைய மிகப்



பொருத்தமான வேட்பாளர்களை நேர்மையாகவும் ஜனநாயக முறைப்படியும் தெரிவு செய்ய வேண்டிய கடமையும் பொறுப் பும் தங்களுக்குரியது என்பத னால் பின்வரும் விடயங்களை மிகத் தயவுடன் முன் வைக்கி றேன்.

01. வேட்பாளர் நியமனத்திற் காக ஒவ்வொரு தேர்தல் மாவட் டத்திற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு கிடைக்கும் விண் ணப்பங்களில் இருந்து தகை மையான வேட்பாளர்களை, தகைமையான வேட்பாளர் நியமனக் குழு மூலம் நியமிக்கவேண்டும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது வன்னித் தேர்தல் மாவட் டத்தில் வேட்பாளர் நியமனக் குழுவில் வேட்பாளர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோ கராதலிங்கம் ஆகியோர் நிய மிக்கப்பட்டதுபோன்ற விந் தையான செயல்கள் வேண்டாம்

தொடர்ச்சியாக மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பி னர்களாக இருந்தவர்களுக்கு நான்காவது முறையாக்கும் வேட்பாளர் நியமனம் வழங்கு வது நீதியற்றது.

கட்சிகளின் தலைவர்களுக்கு மட்டும் இதில் இருந்து விலக்க ளிக்கலாம். கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது குடும்ப ஆட்சி என்று அதை ஏற்க மறுத்தவர்கள் நாங்கள். அதுபோல 19 ஆவது அரசியல் திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டு முறைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமுடியாது என்பதற்கு மகிழ்ச்சியுடன் ஆதரவளித்த நாங்கள் எமது கட்சியில் நான் காவது முறை வேட்பாளர் நியமனம் வழங்குவது ஜனநா யக கொலையாகும்.

03. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் அவர்களுக்குரிய காலம் முடியும் வரை வேறு எந்த தேர்தல்களிலும் போட் டியிட அனுமதி வழங்கக்கூடாது. தவிர்க்க முடியாத தேவை இருப்பின் அவர்கள் தமது மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜனாமா செய்த பின்பே வேட்பாளர் நியமனம் வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேர்தல் கால....**

கட்டமைப்பின் கீழ் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட் டார்.

இதேவேளை, தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகள் இடையே விரைவில் சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது.

அதன்பின் உத்தியோகபூர்வமாக தேர்தல் பணிகளை தொடங்கவுள்ளதாக சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

**மனிதாபிமான...**

நியூகினியாவில் உள்ள மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்புப் பணியகம் இந்த மாதம் மூடப்படவுள்ளதாகவும், கொழும்பில் உள்ள பணியகம் இந்த ஆண்டின் இறுதியில் மூடப் படும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

**அதிகரித்தது....**

போது அது ஒரு வினாடி ஆகிறது

எனவே, ஜூன் 30 அல்லது டிசம்பர் 31 ஆம் திகதிகளில் லீப் வினாடி கணக்கிடப்படும். இந்த ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி அதாவது நேற்று லீப் வினாடி வருகிறது. சாதாரண நாட்களில் சர்வதேச ஒருங்கிணைப்பு திட்ட நேரம் 23:59:59 முடிவடைந்த வுடன் அடுத்த நாள் 00:00:00 என தொடங்கும்.

ஆனால், நேற்று 23:59:60 என கணக்கிடப்பட்டது அதன் பிறகே அடுத்த நாள் தொடங்கு கிறது. அதன்படி நேற்று ஒரு வினாடி அதிகமாக இருக்கும் என்றும் அவ்விஞ்ஞானி கூறியுள்ளார்

**வேட்பாளர்...**

எதிர்வரும் பொதுத் தேர்த லில் பிரதமர் வேட் பாளராக போட்டியிடுவதற்காக மகிந்த ராஜபக் சவுக்கு வேட்புமனு வழங் குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் வெளியிட வில்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று விடுத்துள்ள அதிகாரபூர்வ அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலோ எவருக் கும் பிரதமர் வேட்பாள ருக்கான வேட்புமனுக்கான வாய்ப்பு அளிப்பது தொடர்பில் எந்த சாரார் டையேயும் இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு, கூடப்படும் புதிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களின் கருத்து பெறப்பட்ட பின்னரே பிதமர் தெரிவுசெய்யப் படுவார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவுக்கு போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன கட்சியின் தலைவர் என்ற முறை யில் அனுமதி வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா நேற்றுக் காலை ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் நிமல் சிறிபாலடி சில்வாவின் கருத்திற்கு மறுப்பு வெளியிடப்பட் டுள்ளது.

அதேவேளை இடதுசாரிக் கட்சிகளிலிருந்து வெளியேறிய சில பிரதிநிதிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று திங்கட்கிழமை மாலை சந்தித்து மகிந்த ராஜபக்சவுக்கு போட்டி யிட அனுமதிக்குமாறு கோரியிருந்தார்.

ஆனாலும் அதனை ஜனாதி பதி ஏற்றுக்கொள் ளவில்லை.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுரபிரியதர்ஷன யாப்பா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த ஆகி யோரும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் வேட்பாளர் பட்டியலிலோ அல்லது தேசியப்பட்டியல் மூலமாகவோ மஹிந்த ராஜபக் சவை இணைத்துக் கொள்ள முடியாதென ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலும் நேற்று பிற்பகல் வரை தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இடம்பெற் றிருந்தன.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷவின் அம்பாந் தோட்டை - மெதமுலனவிலுள்ள வீட்டை நோக்கி பொது மக்கள் படை யெடுக்கின்றனர். பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்கு மாறு மக்கள் வலியுறுத்தவுள்ளனர்.

ஆனால் பொது மக்களை மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுக்குழு தூண்டிவிடுவ தாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுப டுத்தும் நோக்கில் சிலர் செயற்படுவதாகவும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்சவுக்கு இடமளிக்க முடியாதென ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள் ளதன் மூலம் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**தளபதி....**

வில்லை எனவும் தெரிய வரு கின்றது.

கடந்த வருடம் ஜூன் மாதமே இவர் தளபதியாக தரமுயர்த்தப் பட்டிருந்தார்.

அனேகமாக, கடற்படையின் புதிய தளபதியாக ரியல் அட் மிரல் ரவீந்திர விஜயகுணரத்ன நியமிக்கப்படுவார் எனவும் தெரி விக்கப்படுகிறது.

**கட்டுப்பணம்...**

வரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களை விரைவாக கட்டுப்பணம் செலுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

மாவட்ட செயலகங்களில் கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும். சுயேச்சை வேட்பாளரிடம் இருந்து 2000 ரூபா கட்டுப் பணம் பெறப்படுவது குறிப்பிடத்தக்கது.


நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை எதிர் வரும் 06ஆம் திகதி தொடக்கம் சமர்ப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

**முன்னாள்....**

டோவின் பணிப்புரைக்கமைய உதவி புனர்வாழ்வு ஆணையாளர் லெப் கேணல் பீ.பீ.எச்.பெர்னான்டோ, பூந்தோட்ட புனர்வாழ்வு நிலைய பொறுப்பதிகாரி கப்டன் எச்.எஸ்.டீ.பெரேரா உள்ளிட்ட அதிகாரிகளால் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர். இவ்வாறு கையளிக்கப்பட்டோர் புனர்வாழ்வின் போது சிங்கள மொழி, தச்சுத் தொழில், அலுமினிய பிற்றிங் தொழில், வயறிங் தொழில் போன்ற பயிற்சிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராஜதந்திர சேவை அதிகாரிகள் வடக்கு நோக்கி படையெடுப்பு





(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான இலங்கையின் புதிய தூதுவர்கள் 30 பேர் அடங்கிய குழுவினர் வடக்கிற்கு பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

நேற்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

வெளிநாடுகளுக்கு இலங்கைக்கான தூதுவர்களாக புதிதாக நியமிக்கப்பட்டவர்களும், ஏற்கனவே வெளிநாடுகளில் துணைத தூதுவர்களாகப் பணியாற்றி, தூதுவர்களாக வேறு நாடுகளுக்கு இடம்மாறிச் செல்ல இருப்பவர்களும் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைபற்றித் தெரிந்து கொள்வதற்காக பல்வேறு தரப்பினரையும் சந்தித்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாகவே வடக்கு அமைச்சர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

பதில் முதலமைச்சரும் கல்வி அமைச்சருமாகிய த. குருகுலராசா தலைமையில் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் ஆகியோருடன் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன், முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அதேவேளை, வடக்கிலுள்ள படையினர் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் குறித்து, புதிய தூதுவர்களுக்கு விளக்கமளிக்கப்படுகிறது. அதன் ஒரு கட்டமாக வன்னிப் படைகளின் தலை மையகத்துக்கு புதிய இராஜ தந்திரிகள் அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

அங்கு அவர்களுக்கு வன்னிப் படைகளின் தலைமையகத்தின் கீழ் உள்ள பகுதிகளின் பாதுகாப்பு நிலவரங்கள் மற்றும் ஏனைய விவகாரங்கள் குறித்து, வன்னிப்படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா விளக்கமளித்தார்.

இலங்கையின் புதிய இராஜதந்திரிகள் 'வெளிநாடுகளில் வடக்கில் இருந்து படைகளை அகற்றுவது உள்ளிட்ட விவகாரங்களுக்கு பதிலளிக்க வேணடிய நிலை ஏற்படலாம் என்பதால், அதற்கான முன்னேற்பாடாகவே அவர்கள் வடக்கிலுள்ள படைத்தளங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தடை நீடிப்பு

(கொழும்பு)

முகத்தை முழுமையாக மூடும தலைகவசத்துக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 14ஆம் திகதி வரை மேல் நீதிமன்றம் நீடித்துள்ளது.

முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசம் அணிவதற்கு தடை விதித்து பொலிஸார் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தத் தடையுத்தரவை நீடித்து நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

## கிராம அபிருத்தி சங்கக் கூட்டம்

வேலணை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மண் கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் சங்கத்திற்கான உறுப்பினர்கள் தெரிவும் சங்கத்தின் முன்னாள் தலைவர் செ. சிவலோகநாதன் தலைமையில் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எஸ். செல்வச்சந்திரா கலந்து கொண்டதோடு, சிறப்பு விருந்தினராக மண்கும்பான் கிராம அலுவலர் எஸ். யோகேஸ்வரன் போன்றோர் கலந்துகொண்டனர்.

இதனையடுத்து புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவுகள் இடம்பெற்றது. தலைவராக பொ. சந்திரசேகரம்பிள்ளை, செயலாளராக செ. சிவலோகநாதன், உப செயலாளராக பே. மோகநாதன், பொருளாளராக க. சிவானந்தராசா, உப தலைவராக ந. தளைய்சிங்கம் மற்றும் எட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப் பட்டது. (05)

# பொதுத்தேர்தலில் ஆசனப்பங்கீடு கூட்டமைப்பின் முடிவு விரைவில்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பான ஆசன ஒதுக்கீடு பற்றிய முடிவு அனேகமாக இன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், செல்வம் அடைக்கலநாதன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் சார்பில், யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் எத்தனை வேட்பாளர்களை நிறுத்துவது என்பது தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இன்று நடைபெறவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் கூட்டத்தில் இந்த ஆசனப்பங்கீடு குறித்து இறுதி முடிவெடுக்கப்படும்.

இந்தத்தேர்தலில் பெண் வேட்பாளர்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், வன்னி தேர்தல் மாவட்டத்தில் அங்குள்ள மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வேட்பாளர் ஒருவருக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்றும்,. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பொதுவான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இரண்டு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்களுக்கு இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கக் கூடாது என்ற திட்டம் சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



அரியாலை நாவலடிப் பகுதியில் பிரதேச சபையினர் வீதி புனரமைப்பில் ஈடுபட்டவேளையில் ஊழியர்களால் கைக்குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (25)

# இந்தோனேசிய விமானம் சுமத்திரா தீவில் வீழ்ந்தது

### பயணித்த 100 பேர் மரணம்

(இந்தோனேசியா)

இந்தோனேசியாவின் சுமத்திரா தீவில், அந்நாட்டு இராணுவ விமானம் வீழ்ந்து விபத்திற்குள்ளானதில் 100 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமத்திரா தீவில் இருந்து





இந்தோனேசிய இராணுவத்திற்குச் சொந்தமான போக்குவரத்து விமானம், புறப்பட்டுச் சென்ற சில நிமிடங்களில் குடியிருப்பு பகுதியில் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது. வடக்கு சுமத்திரா தீவின் மெடான் நகரில் ஹோட்டல் மற்றும் வீடுகள் நிறைந்த பகுதியில் விமானமானது வீழ்ந்துள்ளது. மீட்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்ற நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் புகலிட கோரிக்கையாளரை ஆஸி.யில் காணவில்லை

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு படகு மூலம் வந்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் காணாமற் போயுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலையிலிருந்து இவர் காணாமற் போயுள்ளதாக தமிழ் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

26 வயதான நிரஞ்சன் கணேசமூர்த்தி என்ற இந்த புகலிடக் கோரிக்கையாளர் சிட்னியில் உள்ள ஓபன் என்ற இடத்தில் வசித்து வந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக குடிவரவு திணைக்களத்துடன் தொடர்புகொண்டபோது இது தொடர்பான தகவல் எதுவும் தமக்கு தெரியாது என குடிவரவுத் திணைக்களும் அறிவித்துள்ளதாக தமிழ் தகவல் மையம் தெரிவித்துள்ளது .

இவர் பற்றி ஏதாவது தகவல் தெரிந்தாலோ அல்லது கதைத்து இருந்தாலோ 0421832255 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு தமிழ் தகவல் மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யுலை 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.